பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 21 வெள்ளிக்கிழமை (05.07.2002) தொலைபேசி 3378 ஒலி 198

திருமணப் பட்டுப் புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம்
ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

# தமிழர் தாயகத்தில் இன்று கரும்புலிகள் நினைவுநாள்

## உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

**கரும்புலிகள் தினம் இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.**

இன்று அனுஷ்டிக்கப்படும் கரும்புலிகள் தினம் பொதுச்சுடர் ஏற்றல், தமிழீழத் தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடர் ஏற்றல், மலரஞ்சலி, அகவணக்கம் என்பவற்றுடன் காலை 9மணிக்கு உணர்வு பூர்வமாக ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

1995ம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் உரையாற்றவுள்ளனர்.

கரும்புலிகளை நினைவு கூரும் வகையில் கரும்புலிகளின் நினைவு உருவப்படங்களும் வாசகங்களும் வெளியிடப்பட்டுள்ளதுடன், முக்கிய சந்திகள் நகரங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, அலங்கார வளைவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியாக நடைபெறும்

(10ம் பக்கம் பார்க்க)

# இன்று கரும்புலிகள் தினம் படையினருக்கு அச்சமில்லை

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவு நாளை கடந்த காலங்களில் ஏக்கப்பெருமூச்சுடன் கழித்த படையினர் தற்பொழுது அச்சமற்றுத் தமது நிலைகளில் இருப்பதைக் காணமுடிகிறது.

கரும்புலிகள் நாள் நெருங்குவதற்கு முன்னரே படையினர் உஷாராகி சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கைதுகள் என்று பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் தமது நிலைகளையும் மீண்டும் மீண்டும் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபடுவர். (10ம் பக்கம் பார்க்க)

# ஹயஸ் வானில் கடத்தப்பட்ட நபர் 8 நாட்களின் பின் தப்பி வந்தார்

## பருத்தித்துறையில் சம்பவம்

(மந்திகை)

ஹயஸ் வான் ஒன்றில் இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் எட்டு நாட்களின் பின் கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து தப்பி வந்துள்ளார்.

பருத்தித்துறை முனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரான்சிஸ் ரட்ணகுமார் (வயது-39) என்பவரே கடத்தப்பட்டு தப்பிவந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த 7வருடங்களாக வன்னியில் வசித்துவந்த இவர் கடந்த மாதம் 19ம் திகதி மானிப்பாயில் உள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை

(10ம் பக்கம் பார்க்க)

# ஈழம் அமைவதற்கு பின்னணியாக இருக்கும் நோர்வேத் தூதுவரை விரட்ட வேண்டும்

## பௌத்த சம்மேளனம் போர்க்கொடி

(கொழும்பு)

சமாதானம் என்ற பேரில் வடக்கில் உண்மையான ஈழம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் இருக்கும் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

இவ்வாறு பௌத்த அமைப்புக்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் ஒன்றின் அடிப்படைத் தேவைகளான பொலிஸ், வங்கிகள், வரிவிதிப்பு முறைகள் என்பன ஏற்கனவே வடக்கில் செயற்படத் தொடங்கியுள்ளன. அங்கு நிர்வாகம் புலிகளின் கைகளிலேயே உள்ளது. நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கின் தலையீடு காரணமாகவே இது நிகழ்வது சாத்தியமாகியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் மேலதிக செயலராக அனுரா

(கொழும்பு)

அனுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மேலதிக செயல்ாளராக இன்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசிய பட்டியல் எம்.பியான அனுரா பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற சபாநாயகர் ஆகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# கூட்டுறவு அமைச்சர் யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்துறை அமைச்சர் ஓ.ஆர்.எம். அப்துல் காதர் ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம் மாதம் 13ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

கூட்டுறவுத்துறை அமைச்சரின் யாழ்ப்பாண வருகையின் போது யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் எதிர்

(10ம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு பொலிஸ்குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

வட அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

திமன்வொடிகார் தலைமையில் நேற்று யாழ் அரச செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் குறுகிய கால பொலிஸ் உதவிகள், காவல்துறை

# கண்காணிப்புக் குழுவின் தீவகப் பணிமனை வேலணையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிக்கான யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் நேற்று வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காணிப்புக்குழு அலுவலகம் கண்காணிப்புக்குழுவின் யாழ்

# விடுதலைப்புலி உறுப்பினர் ஐவர் திருமலையில் கைது

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த 5 போராளிகள் சிறிலங்கா கடற்படையினரால் திருகோணமலையில் வைத்து நேற்று திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை கன்னியா வில்

றேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த னர்.

திமன்வொடிதார் தலைமையில் வருகை தந்த இவ் வெளிநாட்டு பொலிஸ் அதிகாரிகள் குழுவினர்

இக் கூட்டத்தில் குறிகிய கால பொலிஸ் உதவிகள், காவல்துறை யினரின் மக்கள் சேவை மற்றும் மக்களோடு அவர்களின் உறவு

(10ம் பக்கம் பார்க்க)

இக்கண்காணிப்புக்குழு அலுவ லகம் கண்காணிப்புக்குழுவின் யாழ் பிரதிநிதி ஒல்பிறண்டினால் திறந்து வைக்கப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா கடற்படையினரால் திரு கோணமலையில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இக் கைதுகள் குறித்து திருகோண

திருகோணமலை கன்னியா வில் டன் விகாரையில் வைத்து இரண்டு போராளிகளும், சம்பூர் உப்பளப் பகுதி யில் மூன்று போராளிகளும் கைது

(10ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்திற்காகப் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரதமர் ரணில் கவலை

(நமது நிருபர்)

**வடக்குக்கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வந்த இனயுத்தம் அத னால் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்பன இன்று பாரதூரமான விடயங்களாகிவிட்டன. எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து உண்மைநிலையை எடுத்துக் கூறப்போகிறேன். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வின் தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி பதவியேற்று ஏழு மாதங் கள் கடந்த் நிலையில் நாடு தற் போது எதிர்நோக்கியுள்ள பொருளா தார நெருக்கடி தொடர்பாக நேற் றிரவு 7.30 மணிக்கு இலங்கை ரூப வாஹினிக் கூட்டுத்தாபனம், மற்றும் தனியார் தொலைக்காட்சியினூடாக பிரதமர் உரையாற்றினார்.

அந்த உரையின் போதே மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்த உரையில் பிரதமர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 20வருடங்களாக நாட்டில் இடம்பெற்று வந்த கொடிய யுத்தத் தினால் பொருளாதாரம் வெகுவாகப்

(10ம் பக்கம் பார்க்க)

## புற்று நோயாளருக்கு நிதியுதவி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட நோயாளருக்கு, "சிவபூமி" புற்று நோயாளர் கருணை நிதியத்தினால் நிதியுதவி வழங்கப் படவுள்ளது.

இந்நிதியுதவியைப் பெறத்தகுதி யுடையவர்கள் தகுந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களுடன் கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாஸன் மற்றும் யாழ் போதனா வைத்திய சாலைக் கணக்காளர் ஆகியோரு டன் தொடர்பு கொண்டு எதிர்வரும் புதன், வெள்ளிக்கிழமைகளில் பி. பகல் 2மணி தொடக்கம் 3மணி வரை இந் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என இந்நிதியத்தின் ஆரம்ப கர்த்தாவான ஆறுதிருமுருகன் தெரி வித்துள்ளார்.

(த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மாணவிகளுக்கான தேசியபயிற்சிப் பாசறை

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அங்கம் வகிக்கும் யாழ்மாவட்ட பாடசாலைகளில்உள்ளவீதிஒழுங்கு முதலுதவி மாணவிகளுக்கான தேசிய பயிற்சிப்பாசறை நிகழ்வுஒன்று நாளையும் நாளைமறுதினமும் வேம்படி மகளிர்உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பயிற்சித் தலைவராக யாழ்மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபரும் சங்க ஆலோசகருமாகிய து.வைத்திலிங்கம் கடமையாற்றவுள்ளார்

அத்துடன் மாணவிகளின் விளையாட்டுத்துறை மற்றும் சேவை மனப்பான்மைமற்றும் தன்னுடைய சுயாதேவையைத் தானே மேற்கொள்ளுதல் போன்றவற்றை வளர்க்கும் நோக்குடன் விளையாட்டு சம்பந்தமானபோட்டிகள் தலைமைத்துவம் பாசறை அமைத்தல் பாலங்கள் அமைத்தல் அணிநடை திசையறிதல் போன்ற போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

எனவே பாடசாலைஅதிபர் ஊடாக பதிவுசெய்த அனைத்து மாணவிகளையும் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# மண் மீட்புக்காக தம் உயிரை ஆயுதமாக்கியவர்கள் கரும்புலிகள்

## இன்று நினைவு தினம்

தமிழீழ விடுதலைப் போராட்டவரலாற்றில் மனித வெடிகுண்டாகத் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் என்று அழைக்கப்படும் வல்லிபுரம் வசந்தன் என்ற வீரமறவனாவார்.

துன்னாலைகரவெட்டியைத் தனது பிறந்த மண்ணாகக் கொண்டவர் முதற்கரும்புலி கப்டன் மில்லர்.

1987ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியினால் வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ''ஒப்பரேசன் லிபறேசன்'' இராணுவ நடவடிக்கையின்போது வடமராட்சிப் பகுதி இராணுவத்தினரின் பிடியில் சிக்கியது. இதன்போது தமது உடைமைகளை இழந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்கள் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களை வான் குண்டுகளால் கொன்றழித்தும், பெற்றோர், உறவினர் முன்னிலையில் பல இளைஞர்களைக்கைது செய்து கொன்று குவித்தமையையும் சகிக்க முடியாது கிளர்ந்தெழுந்தான் கருமபுலி மில்லர்.

ஒப்ரேஷன்லிபரேஷன்மூலம் வடமராட்சியைக் கைப்பற்றிவிட்டோம் என்றவெற்றிக் களிப்பில் நெல்லியடிமத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு பட்டாலியன் (ஆயிரம்) இராணுவத்துடன் பாரியமுகாமொன்றை சிறிலங்கா இராணுவம் அமைத்திருந்தது'

யாரும் எண்ணியிராத வகையில் வடமராட்சிப்பகுதியில் பல இளைஞர்களைக் கொன்றொழித்த இராணுவத்தை கதிகலங்கவைத்து 1987யூலை 5ம்திகதி வெடிமருந்து வாகனத்துடன் சென்று நெல்லியடிஇராணுவ முகாமைத் தாக்கினான் இதில் 120க்குமேற்பட்ட படையினர் பலியாகினர். நூற்றுக்கணக்கான படையினர் காயங்களுடன் புறமுதுகிட்டோடினர் படையினரைக்கலங்கவைத்த முதற் கரும்புலி கப்டன் மில்லரின் 15வது நினைவுதினம் இன்றாகும். இந்நினைவுநாள் இன்று நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருமலை மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உணர்ச்சி பூர்வமாக கொண்டாடப்படுகிறது.

1987 ஆண்டு யூலை 5ம் திகதி முதல்கரும்புலித்தாக்குதல் ஆரம்பித்து வைத்த கப்டன் மில்லருடன் இன்று 241 கரும்புலிகள் தமிழீழ மண்ணுக்காக தம்மை ஆகுதியாக்கியுள்ளனர்.

இவர்களில் ஆண் கரும்புலிகள் 60 பேரும், பெண் கரும்புலிகள் 18 பேரும், ஆண் கடற் கரும்புலிகள் 117 பேரும், பெண் கடற்கரும்புலிகள் 46பேரும் அடங்குவர்.

இன்றைய நாளில் தியாக மிகு கரும்புலிளை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தையிலிருத்துவது கடமையாகும்.

-தமிழன்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபையினால் இவ்வருடம் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 20, 23 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் காலை 9.30 மணிமுதல் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(ஷ-19,2)

### விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய

# வை. கோ. விரைவில் கைதாகலாம் முன்னோடியாக வழக்குத் தாக்கல்

(புதுடில்லி)

ம.தி.மு க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமியை கைது செய்யும் முன்னோடி நடவடிக்கையாக மதுரை திருமங்கலம் காவல்துறை அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

திருமங்கலத்தில் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் வை.கோ.புலிகளுக்கு ஆதரவாக பேசியமைதொடர்பாக வை.கோ. உட்பட 10பேருக்கு எதிராக போடோ சட்டத்தின் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வை.கோ. புலிகளை ஆதரிக்கிறார் என்பதற்காக அவரை கைது செய்ய முடிவுசெய்ததன்மூலம் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்துகிறார் என்று இது குறித்து தி.மு.க. தலைவர் மு கருணாநிதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

அவர் திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசும்போது சட்டம் அதன் வழியில் செயற்படலாம். இந்த விவகாரத்தில் தி.மு.க. தலையிடாது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ- 9)


## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

# சர்வதேசக் கூட்டுறவுத் தினப்

## யூலை - 2002

நாளை 06 07.2002 தொடக்கம் 13, 7 .2002 வரை உள்ளகாலப் பகுதி கூட்டுறவு வாரமாகக் கொண்டாடப்படவுள்ளது.

01. 1) கூட்டுறவுக் கொடியினை சகல கிளைகளிலும் சங்க வாகனங்களிலும் பறக்கவிடுதல்
    2) கூட்டுறவுக் கொடி விற்பனை செய்தல்.
    3) கூட்டுறவுச்சால்வை விற்பனைக்கு விடுதல்.
    4) சங்க கிளைகளில் நாளை 06.07. 2002 தொடக்கம் 13·07.2002 வரையுள்ள காலப்பகுதியில் கூடிய தொகைக்கு (மா, சீனி, பாண், மண்ணெய், உரம், சீமெந்து, கட்டிடப்பொருட்கள் தவிர்ந்த) நுகர்ச்சிப் பொருட்களை கொள்வனவு செய்யும் பாவனையாளருக்கு 5% விலைத் தள்ளுபடி வழங்குதல்.
    5) அ. மேற்படி காலப்பகுதியில் கூடுதலான விற்பனை செய்யும்கிளை முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்..
       ஆ. அக்கிளைக்கு மேலதிக வசதிகள் செய்து கொடுத்தல்
    6) கிளையின் சுத்தம், காட்சிப்படுத்தல், கவர்ச்சிப்படுத்தல் என்பவற்றிற்கு ஊக்குவிப்பு வழங்குதல்
    7) இவ்வாரத்தில் சங்கக் கிராமிய வங்கியில் வைப்பிலிடும் தொகைக்கு ஒருவருட முடிவில் அவ்வருடம் மட்டும் 1% வட்டியினைக் கூடுதலாக வழங்குதல்.
    8) கூட்டுறவு வாரத்திற்குட்பட்ட 06.07.2002 - 13.07.2002வரை) ஆறுமாதங்களில் ரூபா 5000.00 ற்கு மேற்பட்ட சாதாரண சேமிப்புக் கணக்கு உடையோருக்கு 1% வட்டி கூட்டி வழங்கப்படும்
02 1) மூத்த கூட்டுறவாளர் கௌரவிப்பு
   2) ஓய்வு பெறும் பணியாளர்கள் கௌரவிப்பு
   3) சேவை மூப்பில் உளள பணியாளர்கள் கௌரவிப்பு
   4) வினைத் திறன் மிக்க பணியாளர்கள் கௌரவிப்பு.
03. 1) அ. 2001 ல் க. பொ. த . சாதாரண பரீட்சையில் ஆகக்கூடிய பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்
       ஆ. மேற்படி பரீட்சையில் சங்க எல்லைப் பரப்பில் வசித்து, வெளியிடங்களில் கல்வி பயிலும் கூடுதலான பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களுக்கும் பரிசில் வழங்கல்
    2) 2001/2002 காலப் பகுதியில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டக் கல்விசார் போட்டிகளில் வெற்றி பெற்ற சங்க எல்லைப் பரப்பில் உள்ள மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.
    3) 2000 ம் ஆண்டுப் புலமைப் பரிசில் சேமிப்புக் கணக்கை தொடர்ந்து பேணி சேமிப்பு செய்பவர்களுக்கு ரூபா 100/= ஐ அவர்களது சேமிப்பில்சேர்த்தல்.
04. பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு.
05. கவியரங்கம்.
06. புத்தகக் கண்காட்சி- நூல் அறிமுகம்.
07. சைக்கிள் ஓட்டப் போட்டி.
    அ) கிளைகளைத் தரிசிக்கும் சைக்கிள் ஓட்டப் போட்டி.
    ஆ) சைக்கிள் ஓட்டப் போட்டி (சங்க எல்லைப் பரப்பைச் சுற்றி)
08. சிரமதானப் பணி.

மேற்படி நிகழ்வுகளை முழுமையாக நடாத்துவதற்கு தேவையான தகவல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கி அனைவரையும் பங்காளிகளாகுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வ. காந்திமதிநாதன்
கல்வி உத்தியோகத்தர்

பு. இராதாகிருஷ்ணன்
செயலாளர்

(C/4615)


# இராசி பலன்

05-07-2002
(ஆனி21 வெள்ளி)
தசமி பி.ப3.22வரை
பரணி முழுவதும்
இராகுகாலம் 10.27-11.57
நல்லநேரம் 5.57-6.27

**மேடம்**
நல்லமுயற்சி, கலந்துரையாடல், தெய்வதரிசனம், போசனசுகம்

**இடபம்**
சகோதரர்உதவி, திடீர்பயணம், சத்துருஜெயம், காரிய அனுகூலம்

**மிதுனம்**
உறவினர்சந்திப்பு, குடும்பசுகம், தொழில்நன்மை, தனலாபம

**கடகம்**
உடல்சுகம், ஆலயதரிசனம் திடீர்பயணம், பணவரவு

**சிங்கம்**
அதிகாரம், தூரதேசச் செய்தி, இலட்சுமிகரம், நண்பர்கள்சந்திப்பு

**கன்னி**
உடல்வியாதி, வேலைப்பளு பணவரவு, பெரியோர்ஆதரவு

**துலாம்**
பிரயாணம், மனச்சோர்வு வீண்பிரச்சினை, காரிய அலைச்சல்

**விருச்சிகம்**
முயற்சிவெற்றி, தாய்வழி உறவு, மகிழ்ச்சியானநிகழ்வு கல்விச்சிறப்பு

**தனுசு**
குடும்பக்கவலை, வியாபார நன்மை, உறவினர்உதவி முயற்சிதாமதம்

**மகரம்**
சகோதரர்உதவி, கூட்டு முயற்சி, வாக்குமேன்மை மனச்சஞ்சலம்

**கும்பம்**
காரியவெற்றி, பொருள்விரயம், மாதர்சிந்தை, ஆரோக்கியம்

**மீனம்**
பகைவரால் நன்மை, மனக்கிலேசம், பொருள்விரயம் உறவினர்வெறுப்பு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### மஹோற்சவம்

## ஆரம்பம்

(ஏழாலை)

ஏழாலை-புன்கடி அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் திருக்கோயில் மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(ஷ-206)

## முகமூடிக் கொள்ளையர் கைவரிசை

(மந்திகை)

தனித்திருந்த பெண்ணின் தங்க நகைகள் நள்ளிரவு வேளை கத்தி முனையில் களவாடப்பட்டன.

இச் சம்பவம் வதிரிச் சந்திக்கு அண்மையில் உள்ள தோட்ட வெளியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

முகமூடி அணிந்த திருடர்களே கத்தியைக் காட்டி மிரட்டி பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர். (உ-23)

# சமாதானத்திற்கு எதிரான நகர்வுகளை தடுக்க

# தமிழ், முஸ்லிம் சமூகத்தவர்கள் முன்வரவேண்டும்

கடந்த இரண்டு தசாப்தங்களாக வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் இரண்டுசமூகங்களான தமிழ்- முஸ்லிம் சமூகங்கள் பட்ட அவலங்கள் துன்பங்கள், துயரங்கள் வார்த்தைகளால் கூற முடியாதவை, அவற்றில் இருந்து மீண்டும் ஒரு சமாதான சுக வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நேரத்தில், எந்த ஒரு சமாதானத்திற்கு எதிரான நகர்வுகளும் மிகவும் அவதானத்துடன் நோக்கப்படுவதுடன் கண்டிக்கப்பட வேண்டியவை ஆகும்.

**ஒற்றுமை அவசியம்**

கடந்த 20-06- 2002 அன்று மூதூரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலும் அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களிலும ஏற்படுத்தப்பட்ட இனவன் முறைகளும் ஏற்கனவே யுத்தத்தினால் கொடூரமாக பாதிக்கப்பட்ட இம் மக்கள் தம்மிடையே மோதிக் கொள்ள வழி வகுத்தமை மிகுந்த துயரத்திற்குரியதாகும். எமது உரிமையை வென்றெடுக்கும் இவ்வேளையில் எமது ஒற்றுமையை உறுதிப்படுத்துவது மிக மிக அவசியமானதாகும். இதற்கு இவ்விரு சமூகங்களின் அரசியல்வாதிகள் புத்திஜீவிகள், மதத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் கௌரவம் மிக்க பிரஜைகள் மற்றும் இது தொடர்பான ஏனையோர்களின் முனைப்பான பணி இவ்வேளையில் மிகவும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய நாங்கள் கடந்த 12 வருடங்களாக இடம் பெயர்ந்து மிகுந்த துயரமான அவல வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றோம். இவர்களில் சிலர் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளார்கள். பழைய கசப்பான அனுபவங்களை மறந்து மீண்டும் இன ஒற்றுமையை கட்டி எழுப்பிச் சௌஜன்யமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு இவ்வாறான இன வன்முறைகள் சமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடியவையாகும்.இந்த வகையில் இவ்வாறான இன வன்முறைகளையும் சமாதானத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளையும் மிக வன்மையாக கண்டிக்கின்றோம்.

**கோடரிக்காம்புகள்**

தமிழ் பேசும் இரு தேசிய சமூகங்களிற்கிடையிலான ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுறவையும் சீர்குலைத்து இரு விரோதிகளாக்கி இனவன் முறை என்ற தீயினை கொழுந்து விட்டு எரியவிட்டு குளிர்காய எத்தனிக்கும் பேரினவாதத்திற்கு துணை போகும் கோடரிக் காம்புகளை இனம் கண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உரிய தரப்பினர் முன்வர வேண்டும்.

விடுதலைப் புலிகளின் வேலணைத் தாக்குதல் சம்பவத்தை நீதியான நேர்மையான முறையில் விசாரணை செய்வதற்கு விசேட விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது போன்று கௌரவ பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இன வன்முறைகளையும் நீதியான முறையில் விசாரிக்க பாரபட்சமற்ற ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாம் காட்டித்தந்த சமத்துவம் சகோதரத்துவம்,மனிதநேயம் புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு போன்ற இன்னோரன்ன நீதி நடைமுறைகளைக் கடைப்பிடித்து நாட்டில் சமாதானமும் இன ஐக்கியமும் மிளிர பாடுபடுவோம்.

**எஸ். ஏ. சி. முபீன்**
தலைவர்
இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு

## தியாகத்தின் காவியம்

### காவியத்தில் மறவர்களே

நொருங்குண்ட தமிழினத்தின் விடுதலைக்கு வித்தாக
தம் இன்னுயிரை அர்ப்பணித்த அவதார புருஷர்கள்
கரும்புலியாய் களம்பாய்ந்த முதல்வேங்கை மாவீரன்
மில்லரின் நெஞ்சுறுதியில் வெடித்தெழுந்த எரிமலைகள்
இரும்பான கோட்டைகளை துரும்பாகத் தகர்த்தெறிந்து
முப்படைக்கும் எதிர்படையாய் முடிவுரைத்த நாயகர்கள்
பெரும்தலைவன் இலட்சிய பயணத்தின்சுக்கான்கள்
நீர் சிந்தியகுருதி மண்ணவரின் சிரம்தாழ்ந்த அஞ்சலிகள்

தேசத்தை நேசித்த ஈழத்தாயின் வீரபுத்திரர்கள்
தமிழர் நெஞ்சங்களில் நிலைத்துவாழும் சிரஞ்சீவிகள்
பாசங்களின் நல்வாழ்வுக்காய் படைமுகாம் புகுந்தவர்கள்
காரிருளில் கரும்புலியான காவியத்தின் மறவர்கள்
மோசம்செய் ஆளுமையின் கருவறையில் உதைத்தவர்கள்
வீசும் சமாதான நகர்வுக்கு முனைப்பான காரணிகள்
பேசும் தமிழ் உலகென்றும் உம்தற்கொடையின் தியாகத்தை
விண்ணதிலொளிர் மீனாக பார்த்திருப்பீர் ஈழவிடுதலையை

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

### தென்றலிங்கு புயலாகும்..

தேசத்தின் மலர்விற்காய்
தேசத்தில் குண்டேந்தி - பகை
நாசஞ்செய்த உயிராயுதங்களே
நெஞ்சுருக நினைவுகளை சுமக்கிறோம்.

வெங்களமெங்கும் கரும்புலி - இது
வெற்றி விளைவித்திடும் உயிர்ப்பலி
உங்கள் வெடியொலி - நாளை
உதிக்கும் தேசத்திற்கு வாழ்த்தொலி

வெங்களம் புகுவது தலைவன் ஆணைக்காய்
வெடித்தெரிந்து போவது தமிழுக்காய் - என
இடித்துரைத்த யுத்தக் கலங்களே...
எம் விடியலின் கீதங்களே...

வந்துமோதும் தென்றலிங்கு புயலாகும் - புது
வரலாறு எழுதிப்புகழ் பாடும்
எந்தையோர் ஆண்ட நாடுமீளும் - அன்று
உங்கள் கனவுகள் நிஜமாகும்.

நெற்கொழு தாசன்
வல்வெட்டித்துறை.

### இதயத்தில் நாளும் பேசிடுவர்

தேகத்தை கரைத்த தேசங்கள் - தமிழ்
தேசத்தின் தியாக தீபங்கள்
யாகத்தில் முளைத்த சிகரங்கள் - தமிழ்
யாப்பில் நிலைத்த அகரங்கள்

திசைகளில் பறக்கும் தென்றல்கள் - தமிழ்
தேரினில் சிரிக்கும் குயில்கள்
வசைகளை அகற்றிய வள்ளல்கள் - தமிழ்
வாழ்ந்திட உயிரான பிள்ளைகள்

கரும்புலி நாளில் சூரியன் - தன்
கண்களில் நெருப்பை உதிர்ப்பான்
இரும்பினை உருக்கிய வீரர்கள் - எம்
இதயத்தில் நாளும் பேசிடுவர்

நிறைந்திடும் நிலவுகளை நினைப்போம் - தமிழ்
நிலத்தினில் உறவாய் திரள்வோம்
எரிந்திடும் தணலில் புரள்வோம் - தமிழ்
எழுந்திட அனலாய் உருள்வோம்.

தமிழீழக் கவிராயர்

## சுருக்கெழுத்தாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இரண்டு தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்கு இணைந்த சேவைகள் பணிப்பாளரினால் 2002-7-1 முதல் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு எஸ். தயாளினியும், கொழும்பு இந்து சமய விவகார அமைச்சுக்கு சோ. தமயந்தியும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-2)

## நூற் பரிசு தேர்வு விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

அரச இலக்கிய விழா தமிழ் நூற் பரிசுத் தேர்வுக்கான படிவங்களை பிராந்திய ஆணையாளர் பணிமனை, பழைய காட்டுக் கந்தோர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் அறிவித்துள்ளார்

தேர்வுக்கான நூல்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 12 ஆம் திகதியாகும். (ஷ)

## ஏ. சி. எக்ஸ் சேவையை யாழ். மக்கள் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

தபால்கள, பொதிகள் என்பவற்றை இலங்கையின் எப்பாகத்திற்கும் மட்டுமன்றி உலகின் எப்பாகத்திற்கும் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பும் சேவையை கொழும்பு முன்னணி நிறுவனங்களில்ஒன்றானஏ.சி.எக்ஸ் நிறுவனம் யாழ்ப்பாண மக்களுக்கும் வழங்கி வருகிறது.

இந்த வகையில், அதன் யாழ். கிளை இல. 8, நவீன சந்தை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் உள்ளூர் சேவையை ஒரு மணி நேரத்திற்குள்ளும், யாழ்ப்பாணம், கொழும்பு சேவையை ஒரு நாளிற்குள்ளும் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கான சேவையை ஒன்றரை நாட்களுக்குள்ளும் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

தவிரவும், வெளிநாடுகளுக்கான சேவையை ஒரு சிலநாட்களுக்குள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## தேசிய ஒருங்கிணைப்பு சிரேஷ்ட ஆலோசகராக அனுரா நியமனம்

(கொழும்பு)

தேசிய ஒருங்கிணைப்பு சம்பந்தமான சிரேஷ்ட ஆலோசகராக பாராளுமன்ற உறுப்பினர் அனுராபண்டாரநாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்துள்ளார்.

இதற்காக அனுரா எந்த வித ஊதியத்தையும் பெற மாட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இவர் உடனடியாக தனது பணியை ஆரம்பிப்பார். (உ-9)

# படையை விட்டோடியவர்களை வேறுபணியில் அமர்த்தவேண்டும்

### குற்றத்தை தடுக்க இதுவே வழிஎன்றார் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு வேறுதொழில் வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பரவலாக நாட்டில் இடம்பெற்றுவரும் பல்வேறு குற்றச்செயல்களுடன் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது அறியவந்துள்ளது.

மனவிரக்தி, மற்றும் வருமானமின்மை, சமூகத்தில் மரியாதைஇன்மை ஆகியவற்றினாலேயே இவர்கள் இவ்வாறான சமூக விரோத நடவடிக்கைகளுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

வன்முறைச் சம்பவங்களைக் தவிர்க்கும்பொருட்டு இவர்களை அரவணைப்பது தவிர்க்கமுடியாதது எனவும் கொடித்துவக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# பயிர்களின் வளர்ச்சிக்கு பசளையாகவும் பீடை நீக்கியாகவும் உதவுவது வேம்பு

வேம்பு ஆயிரம் மருந்து என்பது பழமொழி மக்கள் நெடுங்காலமாகவே வேம்பை பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். இப்போது பல உலக நாடுகளில் பயிர்பாது காப்பில் பூச்சி நாசினிகளுக்கும பதிலாக வேம்பைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். வேம்பு பற்றிய முதலாவது சர்வதேச கருத்தரங்கு 1980ம் ஆண்டு ஆனி மாதம் ஜேர்மனியில் நடைபெற்றபோது 20 வகையான வண்டுகள், 05 வகையான ஈக்கள், 14 வகையான மூட்டுப் பூச்சிகள், 02 வகையான சிற்றுணணிகள், 25 வகையான வண்ணத்துப் பூச்சிகளும் அந்துக்களும், 05 வகையான தத்திகள் என்பவற்றை வேம்பின் பொருட்கள் கட்டுப்படுத்துகின்றன என கூறப்பட்டுள்ளது. சர்வதேச நெல் ஆராய்ச்சி கழகத்தைச் சேர்ந்த படைக் கட்டுப்பாட்டு நிபுணர் ரமேஸ் கென்னா அவர்கள் வேம்பினால் 195 வெவ்வேறு வகையான பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் வேம்பில் 127 வேறுபட்ட கூட்டக்கலவைப் பொருட்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

விவசாயிகள் வேப்பம் குழையை புகையிலை தவிர்ந்த மற்றைய பயிர்களுக்கு பசுந்தாட் பசளையாக இடுகின்றனர். புகையிலை கசப்புத்தன்மையை அதிகரிக்கும் என்பதால் வேப்பிலை அதிகளவு இதற்கு பயன்படுத்தப்படுவதில்லை. வேப்பம் குழையைப் பசுந்தாட் பசளையாக இடும்போது மணிவேர் நோயைக் கண்டறிந்துள்ளனர். வேப்பிலையில் அதிகளவு புரதச்சத்து காணப்படுகிறது. வேப்பம் விதையினால் கட்டுப்படுத்தக் கூடிய பூச்சிகளை வேப்பம் இலையாலும் ஒரளவு கட்டுப்படுத்தலாம். வேப்பிலையில் இருந்து எந்நேரத்திலும் நாசினிகளைத் தயாரித்துக் கொள்ளலாம். விதையிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிநாசினிக் கலவையைவிட இலையில் இருந்து தயாரிக்கும் கலவை சக்தி குறைந்ததாகவே காணப்படும். இதனால் இலைகளை அதிகளவில் பாவிக்க வேண்டும். இலைகளை அவித்தோ அல்லது இடித்தோ நீரில் கலந்து பாவிக்கலாம். 1-2 கிலோ வேப்பம் இலைகளை 5 லீற்றர் நீரில் அவிக்க வேண்டும். அவிக்கும் போதுபச்சை நிற இலைகள் தங்க மஞ்சள் நிறமாகும் வரை அவிக்க வேண்டும். ஒரு இரவு குளிரவிட்ட கலவையை மறுநாள் பாவிக்கலாம். 1-2 கிலோ இலைகளை உரலில் இட்டு நன்றாக இடிக்க வேண்டும். பின் வாளியில் 2 1/2 லீற்றர் நீரை எடுத்து அதனுள் இடித்த இலச்சக் கையைப் போட்டு மேலும் 2 1/2 லீற்றர் நீரை விட்டு பாத்திரத்தை முடி ஒரு இரவு ஊறவிட்டு மறுநாள் பாவிக்கலாம். இக்கலவையை தெளிக்க முன் துணியினால் வடிக்க வேண்டும்.

வேப்பிலையைக் கொண்டு களஞ்சியப் பீடைகளைக் கட்டுப்படுத்தலாம். விதைகளைச் சேமிக்க இருக்கும் பாத்திரத்தின் அடியில் 1 1/2 சதம மீற்றர் உயரம் வரை இலைகளைப் பரப்பி அதன் மேல் 30ச.மீ வரை தானியங்களை நிரப்பி அதன் மேல் 1 1/2 ச.மீ வரை இலைகளைப் பரப்ப வேண்டும். இதனால் பெருமளவு களஞ்சியப் படைகளைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் இலைகளை நிழலில் காய வைத்து அரைத்துப் பெறப்படும் தூளில் 1-2 கிலோவுடன் 100 கிலோ தானியத்தைக் கலந்து 06 மாதம் வரை பூச்சிகளின் தாக்கமின்றி சேமிக கலாம். மேலும் ஆறு மாதம் வைத்திருக்க வேண்டுமாயின் மேலும் 1 கிலோ அரைத்த வேப்பமிலைத் தூளை கலந்து வைக்க வேண்டும். தானியங்களைச் சேமித்து வைக்கும் போது பூச்சி நாசினிகளைப் பாவித்தால்அதனை உணவிற்குப் பாவிக்க முடியாது. ஆனால் வேப்பிலைத் தூளுடன் கலந்த தானியங்கள் ஆபத்தல்லாதவை எனவே உணவுக்குப் பயன்படுத்த களஞ்சியப்படுத்தும் தானியங்களுடன் வேப்பம் இலைத் தூளைக் கலந்து சேமிக்கலாம்.

10 கிராம் வேப்பம் இலைத் தூளை மண்களியுடன் நீர் சேர்த்துப் பிசைந்து தானியங்கள் சேமிக்கும் பாத்திரங்களை மெழுகிவிடுவதனால் ஒரு வருடம் வரை பூச்சித் தாக்கம் இல்லாமல் பாதுகாக்கலாம். விதைகளில் ஏற்கனவே பூச்சித்தாக்கம் இருப்பின் அவை சேமிப்பதற்கு சிறந்தவை அல்ல. வேப்பம் விதைகளை மாவாக்க விதைகளுடன் கலந்து வைத்தால் களஞ்சியப் படைகளைக் கட்டுப்படுத்தலாம். நாற்று மேடைகளில் குறவணன் தாக்கம் அதிகமாக இருந்த பகுதிகளில் வேப்பம் விதைகளையும் வேப்பம் சருகுகளையும் கூட்டெரு தயாரிக்கும்போது அவற்றுடன் சேர்த்து தயாரிக்கப்பட்ட கூட்டெருவை நாற்று மேடைகளுக்கு இடலாம். இதனால் குறவணன் புழுவின் தாக்கம் கட்டுப்படும்.

**இரா.காயத்திரி**

# பஞ்சம் போக்கும் பனையை தறிப்பது முறையற்ற செயல்

போர்க்கால மேகங்கள் கலைந்து சமாதானத்தின் கீற்றுக்கள் மண்ணில் தென்படும் காலகட்டத்தில் எமது மண்ணின் சுற்றுச்சூழலை இன்னும் கேள்விக்குறியாக்கி பனை, தென்னை காட்டுமரங்களை அழிவுக்குள்ளாக்கும் இச்சூழல் பலத்த கேள்விக்குறிகளை எழுப்புகிறது. பனைவளம் ஒரு பொருளாதார வளத்தின் அடையாளம் மட்டுமல்ல எமது மக்களின் பண்பாட்டு தனித்துவத்தின் சின்னமாகும். பாதுகாப்பு என்னும் பெயரால் பஞ்சம் போக்கும் பனையழிப்பு சமாதானத்தின் இரண்டகத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. கடந்த 18 வருட போரின்போது மக்களின் பொருளாதார வளமான பனை, தென்னையின் வகைதொகையற்ற அழிப்பு கிடடத்தட்ட 2500ற்கு மேல் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதோடு, இது ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதை நாம் அறிவோம். இதனால் உருவான சுற்றுப்புறச்சூழல் மாற்றமும், கால நிலையில் ஏற்பட்ட தாக்கமும் போரின் இனவாத தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

இராணுவச் சாவடிகள் மையங்கள் முன் எண்ணற்ற பனங்குத்திகள் குவிக்கப்படுதல் இயற்கையை நேசிக்கின்ற எந்த மனிதனும் சகிக்க முடியாத அகோரக்காட்சி. இவ் அழிப்புகள் பற்றி பலமூலைகளிலிருந்து எதிர்ப்புகள் எழுந்தும் ''நீ யார் எனக்குச் சொல்லுவது'' என்ற அதிகாரப் போக்கில் அரசும் அதன் இராணுவ இயந்திரமும் இயங்குவது பற்றி வியப்பும் விசனமும் அடைகின்றோம். மேலும் இச்சூழல் போரின் வடுக்களை நினைவுபடுத்துவதாகவும் அதற்கு உயிர் கொடுப்பதாகவும் வெளிப்படுகிறது.

போரினால் அழிந்துபோன கட்டிடங்களை திருப்பி அமைத்தல் சுலபம. அழிந்த மரங்களை மீண்டும் அதே நிலைக்கு கொணர 100 வருடங்கள் எடுக்கும் ஒரு பனைவிருட்சம் மனிதனுடைய வாழ்விற்கு ஒப்பானதென்பர்.


பனைமரம் தமிழர் வாழ்வோடும் அவர்கள் ஆன்மாவோடும் பின்னிப் பிணைந்துள்ள ஒரு விருட்சம். காலங்காலமாக பஞ்ச காலத்தில் யாழ்ப்பாணத்து மக்களுக்கு உணவளித்து தன்னிறைவு மனப்பான்மையும் ஊட்டி வந்தது. யாழ்ப்பாணத்தின் வரட்சியை தாங்குவதற்கும் பலவிதமான பயன்பாட்டிற்குமாக இறைவன் அவனுக்கு கொடுத்த ஒரு பெரும் கொடை இது. இதை அழிப்பது தெய்வீகத்திற்கு எதிரான செயல்! தமிழ் மனிதத்தை அழிப்பிற்கு ஒப்பான செயல். போர்ச்சூழலில் மக்கள் பலவிதமான வல்லுறவுகளுக்குள் உட்படுத்தப்பட்டவர், சமாதானச் சூழலில் மரங்கள் அரசின் வல்லுறவுக்குள் உட்பட்டு வருகிறது. சூழல் பாதுகாப்புக்கு மரங்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்று உலகத்தின் எல்லாக் கோடிகளிலும் மக்கள் குரல் ஓங்கி நிற்க இங்கு தறிக்கப்படும் மரங்கள் பற்றி பன்னாடுகள் மௌனம் சாதிப்பதும் ஒரு வியப்பு. இராணுவம் தனது பாதுகாப்பிற்கு மரங்கள் தேவைப்படின் பனைமரத்திற்கு மாற்றீடாக வேறுவிதமான பொருட்களை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். தமிழ் தாயகத்தின் இயற்கை வளங்களை அழிக்க நாம் ஒரு போதும் அனுமதியோமென்று யாழ் கத்தோலிக்க திரு அவை உரக்கக்கூவுகிறது!

மரம்நடும் இயக்கத்தை ஆதரிப்பதோடு பனை மரத்தின் அழிப்பிற்கெதிராக நாமும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்கின்றோம். பஞ்சம் போக்கும் தாலவிருட்சத்தை அழிக்கும் இர[illegible]க செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

**செயலர்**
**யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம்**



அண்மையில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 42வது ஆண்டு பட்டமளிப்பு விழாவும், 'சைவப்புலவர் சங்க வரலாறும் சைவப் புலவர் அறிமுகமும்' நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் இருந்து வலி வடக்கு பிரதேச செயலர் சைவப்புலவர் திருமதி தி.பத்தினியம்மா சிறப்பு மலரை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.



யாழ் பல்கலைக்கழக ஏழுபேர் கொண்ட கிரிக்கெட் விளையாட்டு குழுவில் ஆர். ஷாஜஹான் (தலைவர்), Dr.D. குணராஜசிங்கம் (அணிமுகாமையாளர்) எஸ். விமலன் (அணியின் உப தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பின் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக) G.ஸ்ரீதரன், K. சசீகரன், S. தனஸ்கந்தன், T. சிவரூபன், T.கௌரிபாகன். ஆகியோரையும் படத்தில் காணலாம்.



பிரண்டே லங்கா (பிரைவேட் லிமிட்டெட்) யாழ்ப்பாணக்கிளை நேற்று முன்தினம் 217,2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் முதலாவது படத்தில் நிகழ்வில் கலந்து கொண்ட எஸ்.சலீம்(சந்தைப்படுத்தல் முகாமையாளர்),எச்.ஐ.பிரடிறிக்ஸ்(சிரேஷ்ட முகாமையாளர்), பி.அமரசிங்க(தலைவர்), சீவரத்தினம் (இலங்கைவங்கி முகாமையாளர்), எம்.எல்.காசிம்(பொது முகாமையாளர்), உபசேன கருணாரட்ண(பிராந்திய முகாமையாளர்), ஜே.தங்கத்துரை(கிளை முகாமையாளர்) ஆகியோரையும்.

இரண்டாவது படத்தில் நிறுவனத்தின் தலைவர் பி.அமரசிங்க நாடாவை வெட்டி கிளையைத் திறந்து வைப்பதையும் அருகில் எம்.எல்.காசிம்(பொதுமுகாமையாளர்), எச்.ஐ.பிரடிறிக்ஸ்(சிரேஷ்ட முகாமையாளர்), கிளை முகாமையாளர் ரீ.தங்கத்துரை ஆகியோர் படத்தில் காணப்படுகிறார்கள்.


**பரீட்சை ஆரம்பம்!**

2ம் தவணைப் பரீட்சை 15.07.02 ஆரம்பமாகவுள்ளதால் பரீட்சை எழுத விரும்புவோர் வினாபபத்திரம் தேவைப்படும் பாடசாலை, கல்வி நிறுவனங்கள் 09.07.02 ற்கு முன்பதிவு செய்யவும்.

விசேட கழிவு நிறுவனங்களுக்கு உண்டு.

பரீட்சைப் பகுதி
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
[5641] [கோயில் முன்பாக]


## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14ந் திகதி தேர்த்திருவிழாவும் 15ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (த)

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஷ்சரஷ் சிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

14ந் திகதி தேர்த்திருவிழாவும் 15ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (த)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ மகா கணபதி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் வரை நடைபெறவுள்ளது. (த)

## விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விளையாட்டு அவை நடாத்தும் யாழ் மாவட்ட திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கரப்பந்து (ஆண்,பெண்), வலைப் பந்து (பெண்), காற்பந்து (9பேர்), துடுப்பாட்டம் (மென்பந்து, 15 பந்துப் பரிமாற்றம்) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் கல்வியியற் கல்லூரி பதிவாளரிடம் 200 ரூபா செலுத்திப் பெற்று இம் மாதம் 10ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-5)

# இன்று ஒரு தகவல்

## ரஷ்ய மன்னர் மகாபீட்டர்

ரஷ்யாவை ஆண்ட சார் மன்னர்களில் பீட்டர் தலைசிறந்தவராவர். இவர் 17 ஆம் வயதில் அரியணை ஏறினார். இயல்பாகவே கொடிய சுபாவமும், அதிக தேகபலமும் பொருந்திய இவர் ரஷ்யஆதிக்கத்தைப் பெருக்கித் தம் நாட்டில் மேற்கு நாடுகளின் நாகரிகத்தைப் புகுத்த வேட்கையுற்றார். தாம்எல்லா அதிகாரங்களும் பெற்ற ஒரு சர்வாதிகாரியாக இருக்க விரும்பினார். தம்மை எதிர்த்தவர்களை நசுக்கினார். பிரபுக்களின் பலத்தை நிர்மூலமாக்கினார். தமது சீர்திருத்தங்களை எதிர்த்த பழைய ரஷ்யப்படை வீரர்களை ஒழித்து, மேனாட்டு முறையில் பயிற்சி அளிக்கப்பட்ட ஒழுங்கானஒரு புதியபடையை நிறுவினார்.

தமது நாட்டு மக்களின் பிற்போக்கான நிலையைஒழித்து, அவர்களை ஐரோப்பிய மக்களைப் போல் முன்னேறச் செய்யப் பீட்டர் அல்லும் பகலும் முயன்றார். ரஷ்ய மக்களின் மூடப்பழக்க வழக்கங்க௱ பலவற்றைச் சட்டங்களின் மூலம் ஒழித்தார். நீண்ட தாடியை வைத்துக் கொள்வதைத் தடைசெய்தார். ரஷ்யர்கள் ஐரோப்பிய ஆடைகள் அணிவதை ஊக்குவித்தார். பெண்கள் முன்னேற்றத்திற்கும் ஆவன செய்தார். கிறிஸ்தவக் கலண்டர் முறையைத் தம் நாட்டில் நுழைத்தார். மேனாட்டுக் கல்வி முறையை நுழைத்து விஞ்ஞானம், கணிதம் தரை நூல் ஆகிய இன்ன பிற நூல்களை ரஷ்யர்கள் கற்குமாறு செய்தார். நாட்டின் வாணிபத்தையும், தொழிற்சாலைகளையும் பெருக்கினார். சில ஆண்டுகள் பீட்டர் ஐரோப்பாவில் தங்கியிருந்து, மேனாட்டுத் தொழில்வாணிப முறைகளைக் கற்றறிந்தார்.

இங்கிலாந்திலும் ஹொலாந்திலும் தங்கியிருந்து கப்பல் கட்டும் தொழிலைப் பற்றிய நுணுக்கங்களைக் கற்றார். தம் நாட்டிலும் கப்பல்கட்டும் தொழிலை நிறுவினார். பொறியியல் வல்லுநர்களையும், மாலுமிகளையும் பயிற்றுவிக்கும் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்தார். ஐரோப்பியத் தொழில் நிபுணர்களை வரவழைத்து ரஷ்யாவில் பல தொழிற்சாலைகளை நிறுவினார். நாடெங்கும் சிறந்த பாதைகளையும், கால்வாய்களையும் அமைத்து உள்நாட்டு வாணிபத்தைப் பெருக்கினார். மக்களது அறியாமையைப் போக்க ஊர் தோறும் பள்ளிகள் நிறுவினார். சுருங்கக் கூறின் மேனாட்டு வாழ்க்கை வசதிகள் பலவற்றைத் தம் நாட்டு மக்களுக்கும் செய்துதந்தார் மகாபீட்டர். முதன் முதல் ரஷ்யாவில் செய்தித்தாள் வெளியிடப்பட்டதும், மருத்துவ நிலையம், பொருட்காட்சிச் சாலை ஆகியவை அமைக்கப்பட்டதும் இம்மன்னரது ஆட்சியில்தான். கட்டடப் பிரியரான பீட்டர் 'செயின்ட் பீட்டர்ஸ் பார்க்' எனும் புதிய தலைநகரை அமைத்து அங்கே கலையழகு மிளிரும் மாபெரும் மாளிகை ஒன்றையும் கட்டினார்.

பீட்டர் மதவிஷயங்களிலும் சர்வாதிகாரியாக இருக்க விரும்பினார். ரஷ்யாவின் மதத் தலைவரான பேட்ரியார்க் என்பவரின் அதிகாரங்களனைத்தையும் நீக்கிவிட்டு, ரஷ்ய மத ஸ்தாபனத்தைத் தம்மால் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

ரஷ்யாவின் அயல்நாட்டு வாணிபத்தைப் பெருக்கப் பீட்டர் கருங்கடலையும், பால்டிக் கடற்கரையையும் கைப்பற்றத் திட்டமிட்டார். துருக்கியர்களைத் தாமே தோற்கடித்து, கருங்கடல் கரையிலுள்ளஆஸாங் நகரைக் கைப்பற்றி, அதனை ரஷ்யக் கப்பற்தளமாக்கினார். ஸ்வீடன் மன்னரான பன்னிரண்டாம் சார்ள்ஸைபோல்டாவா என்னுமிடத்தில் தோற்கடித்தார். 1721 இல் ஏற்பட்ட நிஸ்டாட் உடன்படிக்கையின்படி பீட்டர் பால்டிக் பிரதேசத்தின் கிழக்குப் பாகத்தைப் பெற்றார். இங்குதான் அவர் செயின்ட் பீட்டர்ஸ் பார்க் என்னும் நகரை நிர்மாணித்தார். இவ்வண்ணம் ரஷ்யாவை ஓர் ஐரோப்பிய வல்லரசாக்கி எல்லாத் துறைகளிலும் முன்னேறச் செய்த சர்வாதிகாரியான பீட்டரை மக்கள் தமது தந்தை எனவும், மாமன்னர் எனவும் போற்றினர்.

நன்றி

-சமூக அறிவுநூல்

## மாணவர் வரவின்மையால் பாடசாலை மூடப்பட்டது

(கொடிகாமம்)

கொடிகாமம் கோட்டத்திற்குட்பட்ட யா/போக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலைமாணவர் வரவின்மை காரணமாக மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றியஆசிரியர்கள் தற்காலிகமாகவேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் இப் பாடசாலையில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஷ-256)

## பச்சிலைப்பள்ளியில் தபால் சேவை சீராகும்

(மந்திகை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கான தபால் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

யுத்த அனர்த்தங்களால் பொதுமக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து பச்சிலைப்பள்ளி தபால் நிலையம் கரவெட்டியில் இயங்கி வருகின்றது.

பொதுமக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து அதனை மீள இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தபால் நிலையக் கட்டடம் சேதமடைந்துள்ளமையால் தனியார் கட்டடம் ஒன்றினை வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-23)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனுமீதான விசாரணை

## இன்று மூன்று நீதியரசர்கள் முன்னிலையில்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று மூவர் கொண்ட நீதியரசர்களால் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய, சிங்கள ஜாதிக சங்கமய ஆகிய கட்சிகளே இவ் உடன்படிக்கைக்கு எதிராக மனுக்களைத் தாக்கல் செய்துவுளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோர் உட்பட பலரின் பெயர்கள் அம் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சிலான் திலகரத்ன, பி. விஜயரத்தின ஜே.விக்கிரமரட்ணஆகியோர் முன்னிலையில் இம்மனுக்கள் பரிசீலிக்க எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (உ-9)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடரின் ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஷ)

## விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தங்காலைசிறையில் இடம்பெற்ற சிறைக்காவலர்களைக் கைதிகள் ஆயுத முனையில் பணயம் வைத்த சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மூவர் கொண்ட இவ்விசாரணைக்குழுவில் சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவரும், பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், நியமிக்கப்படவுள்ளார்கள் என அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார். (வ)

## எழுதுநர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலே பொது எழுதுநர் சேவை, கணக்குப்பதியுநர் சேவை, பண்டகக்காப்பாளர் சேவை ஆகியவற்றுக்கான ஆட் சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 41 பரீட்சை நிலையங்களில் சுமார் 6 ஆயிரம் பேர் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (உ-19)

## படகுச் சேவை இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

தீவகத்துக்கான குமுதினிப் படகுச் சேவை கடந்த முதலாம்திகதி முதல் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தினால் நடத்தப்படும் 'சமுத்திர தேவா' படகுச்சேவை ஒழுங்கற்றதாக இருப்பதாகவும் தீவக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (உ-250)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு 'பகவத்கீதை' தொடர் சொற்பொழிவை விரிவுரையாளர் அ. குமாரவேல் ஆற்றுவார். இதற்கான அறிமுகவுரையை க. சிவக்கொழுந்து (ஜே.பி) வழங்குவார். (ஷ)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 300 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

(மந்திகை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 300 குடும்பங்கள் மீள குடியமர்ந்துள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக தமது சொந்த வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் படிப்படியாக இங்கு மீள குடியமர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முகாவில், சோரன்பற்று, முல்லையடி, வண்ணாங்கேணி-வடக்கு புலோப்பளை கிழக்கு ஆகியபகுதிகளிலேயே இவர்கள் மீளகுடியமர்ந்துள்ளனர்.

ஏனைய பகுதிகளில் வீடுகளின்றிக் காணப்படும் காணிகளை துப்புரவு செய்தும்சிறிய சிறிய குடிசைகள் அமைத்தும் வருவதை அவதானிக்கமுடிகின்றது.

அதேவேளை மீளகுடியமர்ந்து வரும் இம் மக்களுக்கு பொது அமைப்புக்கள் எதுவும் உதவஇதுவரைமுன்வரவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-23)

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை மன்றில் ஆஜராக உத்தரவு

(மன்னார்)

யாழ். பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியை எதிர் வரும்ஓகஸ்ட்மாதம்14ம்திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறுமாவட்ட நீதிபதி எம்.பி. மொகைதீன் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் மீனவர்கள் இருவருக்குச் சொந்தமான இரு மீன்பிடிப்படகுகள் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்டன.

கடத்தி வரப்பட்ட படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன் ,சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேக நபரை மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்காமல் நீதிமன்ற உத்தரவைப்புறக்கணித்து வருவது தொடர்பாகவே மன்னார் மாவட்ட நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (த)

## பளை வைத்திய சாலையை மீள இயக்கக்கோரிக்கை

(மந்திகை)

பளை அரசினர் வைத்திய சாலையை மீள இயக்குமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் புத்திசிகாமணி சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புலோப்பளை,முகாவில், சோரன்பற்று, முல்லையடி, மாசார், வண்ணாங் கேணி ஆகிய பகுதிகளில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் மீள குடியமர்ந்துள்ளனர்.

ஏனைய பகுதி மக்கள் வீடுகளை அமைப்பதிலும், காணிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றபோதிலும், சுகாதார வசதி, மற்றும் அத்தியாவசியதேவைகள் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் மீளக்குடியமர பின்னடித்து வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்கள் சுகாதார வசதிகளின்றி, பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந் நிலையில் பளை அரசினர் வைத்திய சாலையை மீள இயக்குவதன் மூலம் மருத்துவ சேவையை அவர்களுக்கு வழங்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## கைதிகள் கிளர்ச்சியை ஜே. வி. பியே தூண்டியது

### உள்துறை அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தடுப்புக் காவலிலுள்ள இராணுவ விட்டோடிகளைக் கொண்டு தங்காலை சிறைச்சாலையில் கிளர்ச்சி செய்வதற்கு சில சிறைஅதிகாரிகளும் ஜே.வி.பி. ஆட்களும்தூண்டிவிட்டுள்ளனர் என்பதற்குகாரணங்கள் உள்ளன என்று உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்ககுற்றஞ்சாட்டியுள்ளார்.

தங்காலைச் சம்பவங்களுக்கும், சப்புகஸ்கந்தவில் நடைபெற்றவன் முறைச் சம்பவங்களுக்கும் பின்னாலுள்ளசக்திகளை கண்டறிவதற்கென விசேடவிசாரணைக்குழுஒன்று அமைக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு ஆத்திரத்துடன் மறுப்புத் தெரிவித்த ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதுபோன்ற சம்பவங்களுக்குஐ.தே.மு நீண்டகாலமாகவே அரச ஊடகங்களைப் பாவித்து எம்மீது குற்றச் சாட்டுகளைகூறிவருகிறது என்றும் கூறியுள்ளார். (உ)

# இவ் வருட முடிவிற்குள் வட-கிழக்கில்

# 3 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்

## இ.த ஆ.சங்கத்திடம் கல்வியமைச்சர் உறுதி

(கொழும்பு)

''இந்த வருட முடிவிற்குள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 3000 ஆசிரியர் நியமனங்கள வழங்கப்பட்டுவிடும்''

இவ்வாறு கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பு கல்வியமைச்சில் 2 மணிநேரம் நடைபெற்றது. கல்வியமைச்சருடன் அமைச்சின் செயலாளர் நாணயக்கார, மேலதிக செயலாளர் தில்லை நடராஜா, தேசியக் கல்வி நிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கினிகே உட்பட உயரதிகாரிகள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழர் ஆசிரியர் சங்க தூதுக் குழுவில் சங்கத் தலைவர் சி. தண்டாயுதபாணி, பொதுச் செயலாளர் த. மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், நிருவாகச் செயலாளர் என். சரவணபவானந்தன், கல்விச் செயலாளர் த. கணேசராஜா, பிரசாரச் செயலாளர் வி.ரி. சகாதேவராஜா, யாழ். மாவட்டதலைவர் வி. கணேசமூர்த்தி, கல்முனை மாவட்டத் தலைவர் வெ. ஜெயநாதன், உபதலைவர் ஆர். ஜெயசீலன், பதுளை மாவட்டச் செயலாளர் எஸ். பாலசுப்பிரமணியம், உபதலைவர் திருமதி எஸ்.ஜெயராஜா, நிர்வாகபீட உறுப்பினர் அன்ரன் போல், யாழ். மாவட்டச்செயலாளர் கே. குமாரசாமி, சம்மாந்துறை செயலர் எஸ். சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் கல்வியமைச்சர் தொடர்ந்தும் கூறுகையில்.

தமிழ்கல்விச்சமூகம் இன்னமும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டேன் யாருக்கும் பாரபட்சம்காட்டப்படமாட்டாது.

வட- கிழக்கு அதிபர் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை வழங்க மேலும்125 மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்க திறைசேரிக்கு அழுத்தம் கொடுப்பேன்என்று குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் கல்விச் சேவை ஆணைக்குழு தமிழ் பேசும் சமூகத்தை புறக்கணித்துபாரபட்சமான முறையில் நடந்துவருகிறது. செயலாளர்தென்னக்கோன் பொறுப்பேற்ற பிற்பாடு வெளிவரும் சுற்றுநிருபங்கள்கூடதனிச்சிங்களத்திலேதான் வெளிவருகின்றன. முன்பிருந்த வீரரத்ன போன்ற செயலாளர்கள் தமிழிலும் அந்தச் சுற்றுநிருபங்களைவெளியிட்டுவந்திருந்தனர் என்று மிகவும் காட்டமாக செயலாளர் த. மகாசிவம் சாடினார்.

அதிபர்சேவை தெரிவில் மிகவும் பாரபட்சம் நிகழ்ந்துள்ளது எனவும் இவை இனவிகிதாசாரப்படி நடந்தனவா? எனவும் அவர் வினா எழுப்பினார்.

அதனையடுத்து உடனேயே இது தொடர்பான பூரண அறிக்கையை சமர்ப்பிக்குமாறுமேலதிகசெயலர்தில்லை நடராஜாவிற்கு உத்தரவிட்டார். (உ)

ரத்வத்தையின் புத்திரர்களை

## பிணையில் விடுவிக்கக்கோரி பத்திரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மடவளபடுகொலை சந்தேக நபர்களான லொகான், சானுக ஆகியோரைப் பிணையில் விடுவிக்கும்படி எதிர்த்தரப்பு சட்டத் தரணிகள் பிணைப் பத்திரத்தை மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த திங்களன்று சமர்ப்பித்த வேளை, அரச சட்டத்தரணியான அச்சலா வேங்கைப் புலி இன்னும் 10 நாட்களுக்குள் இவர்கள் மீதான குற்றச் சாட்டுகளை தான் சமர்ப்பிக்க விருப்பதாக மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதியரசர்களராஜா பெர்னாண்டோ எதிரி சூரிய ஆகியோர் முன்னிலையில் விசாரணைகள் நடைபெற்றபோது பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆட்சேபனையை தெரிவிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

லொகான், சானுக்க ஆகியோர் சார்பில் பிணைமனுக்கள் தாக்கல்செய்யப்பட்டன எதிர் மனுதாரர்களாக சட்டமா அதிபர், சி. ஐ. டி. பணிப்பாளர் ஆகியோர்கள குறிப்பிடப்பட்டு ஹெலன் அமந்தா ரத்வத்தை, அபர்ணா ரத்வத்தை ஆகியோரே இம் மனுக்களை தாக்கல் செய்தனர். அம்மனுக்களில், டிசம்பர் 5 இல் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சி. ஐ டி. பொறுப்பதிகாரி முன்னிலையில் மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் பெப்ரவரி 23 இல் தாமாகவே சரணடைந்தனர்.

சம்பவம்நடைபெற்றபோது சந்தேக நபர்கள் கண்டியிலுள்ள தமது தந்தையின் வீட்டிலேயே தங்கியிருந்ததுடன், தாமே இத்துப்பாககிச் சூடுகளுக்கு காரணமாக இருந்தனரென 5 இராணுவத்தினர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அடையாள அணிவகுப்பிலும் கூட சந்தேக நபர்கள், அடையாளம் காணப்படவில்லை. எனவே மேற்படி சம்பவம் தொடர்பில் இவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களது எதிரிகளே இவர்களின் குடும்பத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில்குற்றச்சாட்டுகளைசுமத்தியுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கண்காணிப்புகுழுத்தலைவர் தாய்நாடு திரும்பினார்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுவின் தலைவரான ஏர்க்கி பிளட்டன், 3 வார கால லீவில் சொந்த நாடான பின்லாந்திற்குச் சென்றுள்ளார்.

இவர் ஒரு முன்னாள் கடற்படைக் கொமாண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது பொறுப்பை அம்பாறை மாவட்ட பதில் கண்காணிப்புக்குழுத் தலைவரான நோர்வே நாட்டைசேர்ந்த ஸ்வையின் தற்காலிகமாக ஏற்றுள்ளார்

இதேவேளை, உதவித் தலைவராக நியமிக்கப்பட்ட உலாகிறிஸ்டியன் ஹெக்ஜே, இங்குள்ள சீதோஷ்ணநிலை ஒத்துக்கொள்ளாத காரணத்தால் தனது பதவியை விலகி சொந்தநாட்டிற்குச்சென்றுள்ளமை தெரிந்ததே. (உ)

## தமிழரும் முஸ்லிம்களும், மோதிக் கொள்வதால் சமாதானம் மலராது

### திகாமடுல்ல எம்.பி.அமீர்

(கொழும்பு)

முஸ்லிம்களின ஏகப்பிரதிநிதிகளான முஸ்லிம்காங்கிரஸ் ஸும் தமிழர்களின்ஏகப்பிரதிநிதிகளான தமிழீழவிடுதலைப் புலிகளும் இணைந்து தான் இந்த மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென்று திகாமடுலல மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் எம் ஐ அமீர் இஸ்மையில் தெரிவிததுள்ளார்.

பேரினவாதிகளுக்கெதிராக போராடும் நிலையை விட்டு முஸ்லிம்களும் தமிழர்களும் தமக்கிடையே மோதிக்கொள்வதால் சமாதானம் மலர்ந்து விடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின சமாதான முயற்சிகளைக் குழப்ப முற்படும் இனவாத தீய சக்திகளை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

இவ்வாறான நேரங்களில் மககள் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ-9)

ஆசிரியர்கள் மீது

## ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை நேரத்தில், தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வாரநாட்களில் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்களை நடத்தி வருவதாக ஆசிரியர் பலர் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே இத்தீர்மானம் எடுத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது. (உ-9)

## பயிற்சிப் பாசறை

(சுதுமலை)

யாழ் மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கமும் முதலுதவிப் படையணியும்இணைந்து பாடசாலை மாணவிகளுக்கான விசேட பயிற்சிப் பாசறை ஒன்றை எதிர்வரும் 6ம் ,7ம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இப்பயிற்சிப்பாசறையில் யாழ்.மாவட்டத்திலுள்ள 12 பாடசாலைகளைச் சேர்ந்த 180 ற்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பாடசாலைகளிற்கிடையிலான வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (த-252)

சட்டவிரோதமாக

## மதுபானம் விற்றோர் குற்றப்பணம் செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த நால்வரிடம் தலா 4 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டது.

மேற்படி நால்வரும் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன், சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறும் 5 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல நீதிபதி உத்தரவிட்டார். (உ-6)

## பாதாள உலக கோஷ்டி முக்கியஸ்தர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

ஆயுதக் குழுக்கள் இரண்டிற்கிடையே இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)

## தோட்டத் தொழிலாளர் பணிநிறுத்த போராட்டம்

(கொழும்பு)

பதுளையில் ஆயிரத்துக்கும் அதிகமான தோட்டத்தொழிலாளர்கள்நேற்று முன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்நோயாளி ஒருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல தோட்ட நிர்வாகம் உரிய நேரத்தில் வாகனம் கொடுக்க மறுத்ததால் அந்த நோயாளி உயிரிழந்தார்.

இந்தச்சம்பவத்துக்குஎதிர்ப்புத் தெரிவித்தே வேலை நிறுத்தப் போராட்டத்தில்ஈடுபட்டனர். (த)

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு

## அவசரமாக அமைக்க கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவை மேலும்தாமதிக்காது உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஏழுமாதங்களில் சீர்குலைந்துவரும்சட்டம்ஒழுங்கு நிலை பொலிஸ் ஆணைக்குழுவின் தேவையை வலியுறுத்துகின்றது இதற்கு தேவையான அரசியற்சட்டத் திருத்தங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று இது குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முழு அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வருவது என்ற யோசனையை பொ. ஐ.மு கைவிட்டுள்ளது. அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகியஇருவருக்கு எதிராகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக பொ.ஐ மு. வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இளைஞர் தொழில் பயிற்சி திட்டம் ஓகஸ்டில் அமுல்

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்தில் வரும் அலுவலக வேலை நாட்கள் அத்தனையிலும் பாராளுமன்ற அமர்வுகளை வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அரசாங்கம் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிகா கித்துள்கொடவிடம் கேட்டுள்ளது. நிறைவேற்றுவதற்கு 20 வரையான சட்ட மூலங்கள் உள்ளன. மறைந்த எம்.பி. களுக்கான அனுதாபத் தீர்மானங்களும் பல நிறைவேற்றப்படவுள்ளன.

மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்கவும், பொருளாதார நிலையை மீளாய்வு செய்யவும் தேவையான சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் அவற்றுள் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சித் திட்டம் ஒன்றும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற முடியும், இந்த தொழிற் பயிற்சித் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் இளைஞர்கள் யுவதிகளுக்கு மாதாந்தப்படியாக ரூபா. 2000, வழங்குவதற்கும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ந)

தும்பளை படுகொலைச் சம்பவம்

## சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது

(மந்திகை)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் வீடு ஒன்றில் தனித்திருந்தஇரு பெண்கள் கடந்த பெப்ரவரி மாதம் வீட்டின் அறைஒன்றிலிருந்து எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரைச் சேர்ந்த இவர் அண்மையில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்பப்பட்ட மேற்படி நபர் கொடுத்த வாக்குமூலத்தின் படி இச்சம்பவத்துடன் தொடர்பு பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் பலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸார் புலன் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (த-23)


கரும்புலிகள் நாள்
யூலை 05
2002
[C/4618]

# ஈழத்தமிழர் மானத்தோடு வாழவே தமிழகத்திலிருந்துகுரல்கொடுக்கிறேன்

## ஜெயாவின் கடிதத்திற்கு வை. கோபாலசாமி மறுப்பறிக்கை

(புதுடில்லி)

ஈழத் தமிழர்களின் வாழ்வில் விடியல் ஏற்பட்டு அவர்கள் உரிமையோடும் மானத்தோடும் வாழவேண்டும் என்பதற்காகவே தான் குரல் கொடுத்துவருவதாகவும்,

கடந்த 9 ஆண்டுகளில் தமது கட்சி புலிகளின் பெயரை கூறி தமிழகத்தில் எந்த வன்முறையிலும் ஈடுபட்டதில்லை எனவும் ம. தி. மு. க. செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, துணைப் பிரதமர் எல். கே. அத்வானிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தடைசெய்யப்பட்ட புலிகளுக்கு ஆதரவாக தொடர்ந்தும் கருத்துக்களைத் தெரிவித்து வரும் வை. கோபாலசாமியை பொடோ மற்றும் சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று குறிப்பிட்டிருப்பதை மறுக்கும் விதமாக வெளியிட்ட அறிக்கையில் வை. கோ. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

பழிவாங்கும் நோக்குடனேயே முதலமைச்சர் என் மீது போடோ சட்டத்தைப் பிரயோகிக்கப் போவதாகப் பயமுறுத்துகிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதைப் பொறுத்த வரையில் எமது கட்சியின் செயற்பாடுகள் வெளிப்படையானவை. ஈழப்பிரச்சினையில் விடுதலைப் புலிகள் குறித்த நிலைப்பாட்டை நாங்கள் வெளிப்படையாகவே பேசி வந்துள்ளோம்.

போடா சட்டத்தை அரசியல் நோக்கிலோ அல்லது எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நோக்கிலோ பயன்படுத்தாமல் ஜனநாயகத்தை கட்டிக்காக்க பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-9)

# பந்தயம் கட்டிய இளைஞன்பரிதாபமரணம்

(சென்னை)

பந்தயம் கட்டிய இளைஞன் பரிதாபமாக மரணமடைந்தார்.

சென்னை சிட்டியம் பாக்கத்தைச் சேர்ந்த சங்கர் (வயது 21) இவர் குட்டை ஒன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார்.

வித்தியாசமாக ஏதாவது செய்து பெயர் வாங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே எண்ணிவந்த இவருக்கு அப்போது ஒரு யோசனை தோன்றியது.

''உயிர் மீனைப் பிடித்து முழுதாக விழுங்கி சாதனை படைப்பேன்'' இவ்வாறு கூட நின்ற நண்பர்களிடம் பந்தயம் கட்டினார்.

அவ்வாறு செய்த வேளை, என்னே பாவம், மீன்தொண்டைக்குள் சிக்கிக் கொண்டதால்மூச்சுவிட முடியாதுதிணறல்ஏற்பட்டது.

உடனடியாகஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதும் இளைஞனின் உயிரைக் காப்பாற்றமுடியவில்லை. இளைஞனின் உயிரை உயிர் மீன் பறித்துவிட்டது. (உ-5)

# விமான விபத்துக் குறித்து ரஷ்ய விமான சேவை சுவிஸ் மீது குற்றச்சாட்டு

(லண்டன்)

சுவிஸ்-ஜேர்மன் வான்பரப்பில் பயணிகள் விமானம் மற்றும் சரக்கு விமானம் ஆகியன மோதிய சம்பவம் தொடர்பாக சுவிஸ் விமான கட்டுப்பாட்டு அதிகாரிகளை ரஷ்ய விமான சேவை குற்றஞ்சாட்டியுள்ளது

இந்த விமான விபத்து ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள இருந்த சந்தர்ப்பத்தை சுவிஸ் அதிகாரிகள் பயன்படுத்தவில்லை என்றும், இவ்விபத்துக்குள்ளான விமானங்கள் இரண்டிலும் தொடர்பு சாதன தொழில்நுட்பக் கோளாறுகள் இருக்கவில்லை என்றும் அது மேலும் தெரிவித்துள்ளது. (ஷ-9)

# பாக். ஆயுத பலத்தை அமெ. பெருக்குகிறது

(வாஷிங்டன்)

பாகிஸ்தானில் தலிபான்களின் ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்காக அதி நவீன ஆயுதங்களையும், உளவு விமானங்களையும் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில்/இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா போரை ஆரம்பித்த போது தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவினர்.

இதனால் தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க பாகிஸ்தான் தனது படைகளை எல்லைப் பகுதியில் குவித்துள்ளது.

இப்பணிக்கே மேற்படி ஆயுதங்களும், உளவு விமானங்களும் வழங்கப்பட்டுள்ளன. (உ-9)

# இந்தோ. பேருந்து விபத்து 9 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின்கிழக்கு ஜாவா மாநிலத்தில் குழந்தைகள்சுற்றுலா சென்ற பேருந்து பள்ளத்தினுள் பாய்ந்ததில் அதில் இருந்த 9 குழந்தைகள் உட்பட 22 பேர் பலியாகியுள்ளனர்.

50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்இவர்.களில் 6 பேரின் நிலைகவலைக்கிடமாக உள்ளதாக இந்தோனேசியத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 60 பேர்மாத்திரமே செல்லக்கூடிய மேற்படி பேருந்தில் 80 இற்கும் அதிகமானோர் பயணித்ததாலேயேபாரம் தாங்காது பேருந்து பளளத்தில் பாய்ந்ததாக கூறப்படுகிறது. (உ)

# உலக தரிசனம்

# கொரியாக்களிடையே பகையை வலுப்படுத்த அமெரிக்கா முயல்கிறது

## வடகொரியா குற்றச்சாட்டு

(சியோல்)

வடகொரிய தென்கொரிய கடற்படைப்படகுகளின் மோதலை அமெரிக்காவே திட்டமிட்டதாகவடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இருகொரியாக்களுக்கும் இடையே பகைமையை அதிகரிக்கும் நோக்குடனேயே அமெரிக்கா இதை திட்டமிட்டுள்ளதாகவும் வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த சில மாதங்களாககடல்எல்லையை மீறி தென்கொரிய கடற்பரப்புக்குள் வடகொரிய போர்க் கப்பல்கள் பல தடவைகள் பிரவேசித்ததும்,

1953ஆம் ஆண்டு இடம் பெற்றவடதென் கொரியாக்களுக்கிடையேயானகொரியயுத்தத்தின் பின்னர் இரு கொரியாக்களுக்குமிடையே முதற்தடவையாக அண்மையிலேயே கடற்படைச்சமர் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# கால் பந்தாட்டம்

# தங்கப் பந்து விருது ஜேர்மன் வீரருக்கு

(சியோல்)

உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் சிறந்த வீரருக்கான சர்வதேச கால்பந்தாட்ட அமைப்பின் முதல் தங்கப் பந்து விருது ஜேர்மன் கோல் காப்பாளர் ஆலிபர் கானுக்குக்கிடைத்துள்ளது.

யப்பானில் நடைபெற்ற இறுதிப் போட்டி யைப் பார்வையிட அங்கு வந்திருந்த சர்வதேசக்கால்பந்தாட்டநிருபர்கள் அளித்த வாக்குகளில் 20 சதவீதத்தை அலிபர் கான் பெற்றதால் அவருக்கு தங்கப் பந்து விருது வழங்கப்பட்டது.

இந்தவாக்களிப்பின் போது உலகப் புகழ்பெற்ற பிரேஸில் வீரர்ரொனால்ட்டோ இரண்டாம் இடத்தையும் தென் கொரிய வீரர்ஹோம் மியாம்கோ மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டிகளில் ஏழு ஆட்டங்களில்கலந்துகொண்டு எட்டுக் கோல்கள் போட்டு தங்கக்காலணி விருதை ரொனால்ட்டோ ஏற்கனவே பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

# ஆப்கான் அகதிகளுக்கு உதவி

(காபூல்)

ஆப்கானில் இருந்து இடம் பெயர்ந்து, மீளவும் அங்கு நாடு திரும்பியுள்ளவர்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் மூலம் 90 கோடி ஆப்கான் பணத்தை வழங்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தவிரவும், அமெரிக்காவின் 1000 கோடி ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 700 கோடி ரூபா ஆப்கானுக்கு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# இந்தியாவில் மிகவேகமாகப் பரவும் எயிட்ஸ் நோய்

(புதுடில்லி)

இந்தியாவில் எயிட்ஸ்நோய் மிக விரைவாக பரவி வருவதாக ஐ நா. சபை மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தியாவில்40லட்சம் பேர் எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகியுள்ளதுடன் உலகில் அதிகமாக எயிட்ஸ் நோயாளிகளைக் கொண்ட நாடுகளின் வரிசையில் 2 வது இடத்தில் இந்தியா உள்ளது.

இதே வேளை இந்தஎயிட்ஸ் நோய் மேற்கு கரை தீவுகள், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மிக விரைவாக பரவி வருவதாகவும் அந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. (உ-9)

# நேபாளத்தில் மோதல் 5 மாஓதீவிரவாதிகள் பலி

(காட்மண்டு)

நேபாளத்தின் மேற்கு கரையில் அந்நாட்டுப் படைகளுக்கும் மாஓ தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 மா ஓ தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

அத்துடன், அவர்கள் வசமிருந்த துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்களையும் நேபாளப் படைகள் கைப்பற்றியுள்ளன.

இதேவேளை, ஆத்திரமுற்ற மாஓக்கள் அப்பகுதியில்இருந்த 5 பெண்கள் உட்பட 11பேரை கடத்திச் சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ)

# பதவி விலகப் போவதாக மலேசிய பிரதமர் அறிவிப்பு

(கோலாலம்பூர்)

பதவியில் இருந்து விலகப் போவதாக மலேசியப் பிரதமர் டாக்டர் மகஜோர் மருகோன் அறிவித்துளளார்.

இத்தாலியில் விடுமுறையைக்கழித்துவிட்டுநாடு திரும்பியுள்ள அவர், இது குறித்து வெளியிட்ட அறிக்கையி,ல்

அடுத்தவருடம் தனது 76 வது வயதில் பதவி விலகப் போவதாகவும், தனக்குப் பின்னர் அதிகாரங்கள் அனைத்தும் பிரதிப் பிரதம மந்திரி அப்துல்லா அகமட்டிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-9)

## ஆப்கான் திருமணவீட்டில் இடம்பெற்ற

# விமானக் குண்டுத் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் புஷ் அனுதாபம்

ஆப்கானிஸ்தானின் தென் பகுதியில் திருமண விழாவொன்றில்அண்மையில்இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சுத்தாக்குதலில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்க ஜனாதிபதிஜோர்ச் டபிள்யு புஷ் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துளளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்ட பூர்வாங்க அறிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்திற் கெதிரான போரை மேற்கொண்டு வரும் அமெரிக்க விமானப்படையின் பி-52ரக விமானமொன்றிலிருந்து கற்கள் போல் வீசப்பட்ட குண்டுகளே, உருங்கான் மாகாணத்தின் டெகாவத் கிராமத்தில் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட அப்பாவிஆப்கானிஸ்தானியர்கள் மீதுஇலக்குத் தவறி வீழ்ந்துள்ளன.

இச்சம்பவம் பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொள்ளவென விசாரணை ஒன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தாக்குதலில் 40 பேர் உயிரிழந்ததுடன் 100 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

குறள்

வலம்புரி

## சாட்டுக் கழிப்பு

தீவகத்தின் வேலணையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு விடுத்த அறிக்கை வேடிக்கையாகவுள்ளது. அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட அவ் அறிக்கையில் விடுதலைப் புலிகள் தாக்கப்பட்டதற்கான போதிய ஆதாரங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீவகத்திற்குப் பொறுப்பாக இருந்த கடற்படை அதிகாரி தாக்குதல் சம்பவம் நடைபெற்ற போது விடுமுறையில் கொழும்பிலிருந்ததாகவும், எனினும் விடுதலைப் புலிகளுக்கும், கடற்படையினருக்கு மிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறியதற்காக அவரை இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதில் விசித்திரமென்னவெனில் கடற்படையினர் விடுதலைப் புலிகளைத் தாக்கியதற்கான ஆதாரங்கள் இல்லையெனத் தெரிவித்த விசாரணைக் குழு தனது பரிந்துரையில் கடற்படைக்கும், புலிகளுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்த தீவகக் கடற்படை அதிகாரி தவறிவிட்டதாகக் கூறியிருப்பது ஒன்றுக்குப் பின் ஒன்று முரண்பாடுடையதாகவுள்ளது.


கடற்படையினர் புலிகளைத் தாக்கவில்லை என்றால் புலிகளுக்கும், கடற்படையினருக்கு மிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டு அபத்தமானது. அத்தோடு கொழும்பில் இருந்த தீவகக் கடற்படைப் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்குவதும் தவறாகும்.

ஆக பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு குற்றம் செய்யாத கடற்படை அதிகாரி ஒருவருக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் தனது விசாரணைகளை முடிவுறுத்தி தப்பிக் கொள்கிறது.

அதாவது புலிகளைத் தாக்கியவர்களை இனங்காணாமல் அப்படியே விட்டு விட்டு தீவகக் கடற்படைப் பொறுப்பதிகாரிக்கும் பாதகமில்லாமல் அவர் கொழும்பில் இருந்ததாகக் கூறி கதையை முடிக்க முனைந்துள்ளதுடன், தாக்கியவர்கள் தப்பிக் கொள்வதற்கும் வகை செய்துள்ளது.

# தோற்றம், ஒடுக்கங்களுக்கு மூலகாரணராகிய
# சிவப்பரம்பொருளே முழுமுதற் கடவுளாவர்

## வெள்ளி நற்சிந்தனை



### சிவ. சண்முகவடிவேல்

கந்தன் கருணையைக்கழற வந்தது கந்தபுராணம். கடவுள் கொள்கையில் அத்தேவர் தேவர் அவர்தேவர் இவர் தேவர் என்று இரண்டாட்டாட்டாது உறுதியான உண்மைப் பொருளை உணர்த்தவும் கந்தபுராணம் தவறவில்லை. சைவ சித்தாந்தக் கருப்பொருளை நடுநாயகமாகக் கொள்வது கந்தபுராணம். சைவசமயத்தில் எத்தனையோ தெய்வங்கள்! எத்தனையோ தேவர்கள்!! எத்தனையோ தேவதைகள்!!! அத்தனை தெய்வங்களுக்கும் அத்தனைதேவர்களுக்கும் அத்தனை தேவதைகளுக்கும் மகாதேவராக விளங்குபவர் சிவபெருமான். இந்த உண்மையைத் திடசங்கிற்பது கந்தபுராணம். அதனால் சைவர்களுக்கு வழிபாட்டு உறுதியையும், பல தெய்வங்களாகிய சண்ட மாருதக் காற்றில் மொத்துண்டு சமயத் தெளிவின்று அலைந்து திரிந்து தடுமாறாமல் சமயத்து தெளிவில் சைவர்களை உறுதியான கொள்கையில் நிறுத்தும் பெருமை கந்தபுராணத்திற்கு உண்டு.

வழிபடப் பலதெய்வம்

'விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும், விளம்பிலுன்போல் கண்கண்டதெய்வமுளதோ சகல சலாவல்லியே' என்ற குமரகுருபரர் வாக்கால் தெய்வங்கள் கோடானுகோடி உண்டென்பது போதரும். அவ்வாறான தெய்வங்களுள் சைவ சமயத்தவர்கள் வழிபாட்டுத் தெய்வங்களாகக் கைக்கொள்ளும் பல தெய்வங்களைக் கந்தபுராணம் விரித்துரைக்கும். அத்தெய்வங்கள் தோற்றிய சந்தர்ப்பத்தையும் ஆற்றிய தொண்டையும் தோற்றுவித்த கடவுளையும், வழிபடுதெய்வமாகக் கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும் கந்தபுராணம் காட்டத் தவறியதில்லை. அவற்றுள் ஒரு சில தெய்வங்கள் இவை. சிவபெருமான் (பிறப்பு இறப்பு, தந்தை தாய் இல்லாதவர் அனைத்துத் தெய்வங்களுடைய தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் மூல காரணர் அவரே) ஏனைய தெய்வங்கள் உமாதேவியார், விநாயகர், செவ்வேள், வைரவர், வீரபத்திரர், ஐயனார், திருநந்தி தேவர், காளி, பத்திர காளி, நாராயணன், நான்முகன், இந்திரன், இலக்குமி தேவி, சரசுவதி, வள்ளியம்மை தெய்வயானை எனப்பல.

சிவனின் வியாபகம்

சிவபெருமானுடைய வியாபகம் சுருக்கில் அடங்காது பெருகில் விரியும் ஆதியும் அந்தமும் அற்றவர். அருவத்திற்கும் உருவத்திற்கும் அப்பாற்பட்டவர்.

உடலாகி, உடலினுள் உயிராகி உயிர்கள் தோறும் வியாபித்து நிற்பர். காண்பான், காட்சி, காட்டுவாதும் பாசத்தளை பூண்டின்றியும் ஆன்மாக்களுக்கு நன்மையைச் செய்பவராகிச் சிதாகாசத்தில் திருநடனம் புரிவர்.

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே உண்டியாய் அண்டவாணரும் பிறரும் மற்று யாரும் மலரடி காணாச் சிவபெருமான் சீவ கோடிகளைப் பேதித்து வளர்த் தெடுக்கப் பெய்வளை பார்ப்பதி தேவி யாரைப் படைத்தார் கஜமுக சங்காரம் காரணமாக, கணபதியாரைக் கொடுத்தார் சூரசங்காரம் செய்யும் பொருட்டுச் செவ்வேளைச் செகத்துச் சேர்த்தினார். பரமனை மதித்திடாப் பங்கயாசனன் ஒருதலை கிள்ளி ஒழிந்த வானவர் குருதியும் அகங்தையும் கொள்ளப் புரிதரு வடுகனை வையகத்து வழங்கினார். அவியுண்டிடும் அமரர் யாவரும் முடிந்திட வெருவி அமரர் முனிவர் யாவரும் உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத் தடிந்திட வீரபத்திரக் கடவுளைத் தரணிக்குத் தந்தார் சிவபிரான். கருணையினால் திருநந்தி தேவர் கைலாசமலையில் காவல் தொழில் பூண்பர்.

அரியும் அரனும் கூடிக் கொடுத்ததால் அல்லவோ ஐயனார் அரிஅரபுத்திரர் என்றானார்.

இந்திரன் மால் அயனைப் படைத்தவர் சிவபிரான். 'செங்கண்மால் தானும் நானும் தேடுதற் கரிதாய் நின்ற எங்கள் தம் பிராற்கு மேலாக எண்ணவோர்தேவும் உண்டோ' என்றபிரமருடைய வாக்காலும் 'எந்திரம் யாம் உள்நின்று இயற்றுகின்றாய் நீயன்றோ' என்று பின்னரும் சொல்லுவதாலும் சிவபெருமானுடைய மகத்துவத்தை உணரலாம்.

வழிபடுதற்குரியவர்

நாம் நம் நலம் கருதிஎந்தத் தெய்வத்தையும் வழிபடலாம் அந்தத்தெய்வங்களைஎல்லாம் தோற்றுவித்தவர் சிவபெருமான் என்றால் உண்மையில் வழிபாட்டிற்குரிய கடவுள்சிவபெருமான்என்றதத்துவத்தை நமக்கு உணரவைக்கும் கந்தபுராணக் கடவுள்கொள்கைத் தெளிவு தூய்மையானது. சைவ சமயத்தவர்கள் கடவுள் வழிபாட்டின் போதுகருத்தில் உன்னத் தகுந்தது தாருகாவனத்துத் தபோதனர்கள் சிவபெருமானையே அழித்து விடயக்ஞும் புரிந்தார்கள். யாகாக்கினியில் தோற்றிய பலவற்றையும் சிவபெருமானை அழித்து விட ஏவினார்கள். முடிவில் வேள்வித்தீயையே ஏவி விடுத்தார்கள் சிவபிரானை அழிக்க முடிந்ததா? அழிக்கத் துணிந்த முனிவர்களுடைய அறியாமைக்கு சிவபிரான் இரங்கி அவர்களுக்குக் கருணைகாட்டியதிறத்தையும் கந்தபுராணம் கழறத்தவறியதில்லை. அது கச்சியப்ப சிவாசாரியாரின் நேர்மையை என்றும் உலகிற்கு உணர்த்திய வண்ணம் இருக்கும். ●

## தினசரி தியானம்

### வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

- திருக்குறள்

வேந்தே, உன்மகிமைகளைச் சதா வாய்விட்டுப் பேசிக் கொண்டிருப்பது உன்வழிபாடுகளுள் முக்கியமான தொன்றாகும்.

பேசவேண்டியதைப் பண்புடன் பேசுவது வாய்மையாகும். மிகைப்படப் பேசுதலே நோய்களுள் கொடிய நோயாம். வாய்பொத்திப் பேசாதிருக்கக் கற்றுக் கொள்ளுதல் பாடங்களுள் முதல் பாடமாகும், பிறகு, பயன்படுவதையே பேசவேண்டும். அதையும் இன்சொற்களால் பேச வேண்டும். வற்புறுத்திப் பிறர்மீது நம் வாக்குகளைத் திணிக்கலாகாது. நாம் பேசியது போதவில்லையென்ற உணர்ச்சி கேட்பவரிடம்உண்டாகும்படி சுருங்கப் பேச வேண்டும்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## சிகிச்சைக்காக வன்னி சென்றவர் சடலமாக மீட்பு

(உடுவில்)

சிகிச்சைக்காக வன்னிசென்றவர் பதினைந்து நாட்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த ந.வைத்தியநாதன் (வயது46) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

மேற்படி நபர் வன்னியில் வைத்திய சிகிச்சை பெறுவதற்காகத் தனது தாயாருடன் சென்றுள்ளார் இருவரும் அங்குள்ளகடையொன்றில் தேநீர் அருந்தியுள்ளனர். அதன் பின்னர் காணாமல் போன அவர் பதினைந்து நாட்களின் பின் காட்டுப்பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்;

மனநோயாளியான இவரது சடலத்தின் தலையில் காயம் காணப் பட்டதாகவும் தெரிய வருகிறது. (ஷ-261)

## மீளக்குடியமர்வோர்க்கு மனிதாபிமான உதவிகள்

(காரைநகர்)

வன்னிப் பகுதியில் இருந்து ஏ-9 பாதையினூடாக காரைநகரிற்கு மீளக்குடியமர வந்த 40 குடும்பத்தைச் சேர்ந்த 98 பேர் பாலாவோடை அ.மி த.க பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்து கலாசார, அமைச்சரின் போக்குவரத்து ஏற்பாட்டில் இவர்கள் நேற்று முன் தினம் யாழ் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களிற்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதுடன் உலர் உணவு வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மீளக்குடியமர்ந்தவர்களின் குடியிருப்புகள் சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டு வருவதுடன் இவர்களுக்கு ஏனைய உதவிகளும் வழங்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

(ஷ-246)

## ஆணையாளருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை வட்டாரமக்களின் அடிப்படை வசதிகள் குறித்து யாழ். மாநகரசபை உறுப்பினர்செல்லையா விஜயரட்ணம்மாநகர ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்.கோட்டைவட்டாரத்தில் வாழ்ந்து வந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்தில் குடியமர்வதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் இம்மக்களின் அடிப்படை வசதிகளில் குடிநீரும், மலசலகூடமும் முக்கிய இடத்தை வகிக்கின்றன;

எனவே, இவ்வட்டார மக்களின் தாகம் தீர்க்கவும் சுகாதாரம் பேணவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஷ)

## முக்கூட்டுமா வழங்கல்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தாய் சேய் சிகிச்சைநிலையக்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் முககூட்டு சத்துணவு மா வழங்கப்பட்டு வருகின்றது.

(உ-23)

# படை முகாம்களை பார்வையிட விசேட குழு திருமலை விஜயம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் படையினர் நிலை கொண்டுள்ள இடங்களைப் பார்வையிடுவதற்கு விசேட குழு ஒன்று கொழும்பிலிருந்து திருமலைக்கு விஜயம் செய்துள்ளது.

இக் குழுவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நியமன எம்.பி துரைரட்ணசிங்கம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் மூதூர் மற்றும் கிண்ணியா போன்ற பகுதிகளுக்கும் சென்று படையினர் தங்கியுள்ள இடங்களைப் பார்வையிட்டனர்.

பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறுவதிலுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அங்கிருந்து படையினர் வெளியேறுவதிலுள்ள தடைகள் குறித்தும் இவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். (த)

## மிதி வெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவில் மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்த்தர் ஒருவர் கால் பாதத்தை இழந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சோமசுந்தரம் (வயது 52) என்பவரே கால் பாதத்தை இழந்தவராவர். (இ-6)

# கரும்புலிகள் பாகம் இரண்டு இசைத்தட்டு இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் உருவாக்கிய 'கரும்புலிகள் பாகம் இரண்டு' பாடல் இசைதட்டு இன்று வெளியிடப்படும்.

தமிழீழத்தின் முதன்முதலாக நிதர்சனம் தர்மேந்திரா கலையகத்தில் டிஜிற்றல் ஒலிப்பதிவு மூலம் பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டாக கரும்புலிகள் பாகம் இரண்டு பாடல் வெளியிடப்படுகிறது.

இவ் இசைத்தட்டுக்குரிய பாடல்களை கவிஞர் புதுவை ரத்தினதுரையும் ச.பொட்டுவும் எழுதியுள்ளனர்.

இசைவாணர் கண்ணனின் இசையிலும், முரளியின் இசை நெறியாள்கையிலும் பாடல்களை எஸ்.ஜி. சாந்தன், ஜெயா சுகுமார், திருமலைச்சந்திரன், எஸ்.நிரோஜன் மணிமொழி, தவமலர் ஆகியோர் பாடியுள்ளனர்.

இவ் இசைத்தட்டின் பூரண விநியோக உரிமையை நிதர்சன நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. (இ)

## சட்டத்தரணிகள் சமாதான நீதவான்களுடன் ஞாயிறு சந்திப்பு

(ளாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சட்டத்தரணிகள் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு யாழ் மாவட்டத்திலுள்ள சமாதான நீதவான்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விரு சந்திப்புக்களின் போதும் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் பங்குபற்றவுள்ளனர். (ம)

# கண்ணிவெடி அபாயம் ஐ.நா. அதிகாரிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் பரவலாக புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள், மிதிவெடிகள் அகற்றுவது குறித்து ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட அதிகாரிகளும் பிரிட்டனைச் சேர்ந்த கண்ணிவெடி செயற்பாட்டுக் குழு அதிகாரிகளும் உள்ளூர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். இந்த சந்திப்புக்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது மற்றும் கண்ணிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியல் ஏற்படுத்துவது குறித்து இச் சந்திப்பில் ஆராயப்பட்டது. (ந-5)

## யுத்தத்திற்காகப்...

பாதிக்கப்பட்டு கடன்களிலேயே அரசாங்கம் தனது காலத்தை ஓட்டி வந்தது.

வங்கிகளில் இருந்தும், ஊழியர் சேமலாப நிதியிலிருந்தும் அரசாங்கம் பெருந்தொகையான பணத்தைக் கடனாகப் பெற்று வந்துள்ளது. அரசாங்கம் பெற்ற கடனைச் செலுத்துவதற்கு மட்டும் இவ்வருடம் 32 ஆயிரத்து 700 கோடி ரூபா தேவைப்படுகிறது. ஆனால் நாட்டின் வருமானமோ 27ஆயிரத்து 800 கோடி ரூபாவாகும். இந்நிலையில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்காது விட்டால் வரும் ஆண்டுகளில் பாரிய நிதிநெருக்கடியை எதிர் நோக்கவேண்டிவரும்.

எதிர்காலத்தில் பணத்தை மீளச் செலுத்தும் அடிப்படையில் யுத்த உபகரணங்களையும், மற்றும் தளபாடங்களையும் பெற்றுக்கொண்டமைக்காக 1360 கோடி ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளது.

தற்போது அரசு விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று சமாதானம் மலர்ந்து எனிமேல் ஒருபோதும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்காது போனாலும் கொள்வனவு செய்த யுத்த உபகரணங்களுக்கும் மற்றும் தளபாடங்களுக்குமாக 2008ம் ஆண்டு வரை அரசு கடன் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் தனது செலவீனத்தைக் குறைப்பதற்கும், வருமானத்தை அதிகரிப்பதற்கும் உள்நாட்டுக் கடன்தொகையை மீறிச் செல்லக்கூடிய வேகத்தில் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்றும் பிரதமர் தனது உரையின் போது குறிப்பிட்டுள்ளார். (வ)

## ஈழம் அமைவதற்கு...

சிங்களவர்கள் ஒன்று சேர்ந்து இவரை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று சம்மேளனத்தின் ஆலோசகர் குசலாதம்ம நாயக்கதேரர் செய்தியாளர்கள் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

இதனை வலியுறுத்தும் வகையில் கையெழுத்து வேட்டை ஒன்றைத் தாம் பொசன் தினத்தன்று அநுராதபுரத்தில் ஆரம்பித்திருந்ததாகவும், தொடர்ந்து அம்பாறை, திசமாறாகம பகுதிகளில் கையெழுத்துககளை சேகரிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்மேளனத்தின செயலாளர் புண்ணியவர்த்தன தேரர் பேசுகையில் இலங்கையின் இறைமையும் ஐக்கியத்தையும், சுதந்திரத்தையும் நோர்வே சேதப்படுத்திவிட்டது. இந்நிலையில் நோர்வேயின் தூதுவரை விரட்டியடிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ)

## வெளிநாட்டு...

என்பன தொடர்பாக ஆராயப்பட்டதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பொலிசாரின் சேவைகள் மக்களுக்கு திருப்தி அளிக்கின்றதா அல்லது முரண்பட்டு காணப்படுகின்றதா என்பது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை யாழ் வந்துள்ள இப் பொலிஸ் குழுவினர் குடாநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் இலங்கைப் பொலிசாரின் நடவடிக்கைகளை அவதானித்து அது தொடர்பாக அறிக்கை தயாரிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

வாசகர்களே:-
ஒவ்வொரு
திங்கட்கிழமையிலும்
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது வாங்கிப் படியுங்கள

## ஹயஸ் வானில்...

புறாப்பொறுக்கி ஆலடிப் பகுதியில் மோட்டார் சயிக்கிளில் வந்த இருவர் அவரை வழி மறித்துத் தாக்கியதாகவும்;

சற்று நேரத்தில் அவ்விடத்திற்கு விரைந்து வந்த ஹயஸ் வான் ஒன்றில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் பாழடைந்த வீடு ஒன்றினுள் கொண்டு செல்லப்பட்ட இவர் அங்கு நிலையாகப் பொருத்தப்பட்ட விலங்கில் கட்டப்பட்டு உடைகள் களையப்பட்டு வன்னியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 25ந் திகதி அதிகாலை இயற்கைக் கடன் கழிக்கப் போவதாகக் தெரிவித்துக் கதறிய வேளை காவலுக்கிருந்த நபர் ஒருவர் தனது கைவிலங்கைக் கழற்றி விட்டபோது அவரைத் தாக்கி விட்டு தப்பியோடி வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறை அலுவலகம், பருத்தித்துறை பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறையிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)



திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பூங்காவன உற்சவத்தன்று மேற்படி ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மகா கணபதீஸ்வரக்குருக்கள் 45 வருட சேவையைப் பாராட்டி "கிரியா துரந்தர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் அவரையும் அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு ஆலயத்தின் தலைவர் வ. செல்லத்துரை பரிசல் வழங்குவதையும் படத்தில் காணலாம்

## தமிழர் தாயகத்தில்...

எழுச்சி நிகழ்வுகளில் கரும்புலிகளின் நினைவுரைகளும், நாடகங்கள் மற்றும் இசைநடன நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதுடன், கரும்புலிகளின் பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை யாழ்குடாநாட்டில் கரும்புலிகள் தின நிகழ்வு நெல்லியடியில் உள்ள கரும்புலி கப்டன் மில்லர் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெறவுள்ளது.

பி.பகல் 4.45மணிக்கு ஆரம்பமாகும் இவ்வெழுச்சி நிகழ்வில் தீவகம், வலிகாமம், தென்மராட்சி மற்றும் வடமராட்சி மக்கள் கலந்து கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் சிறப்புரையாற்றவுள்ளனர். (இ)

## கண்காணிப்புக்குழுவின்...

இவ்வலுவலகம் வாரத்தில் செவ்வாய்க்கிழமையிலும் வியாழக்கிழமையிலும் காலை 10 மணிமுதல் பி.பகல் 2மணிவரை திறந்திருக்கும் எனவும் அச்சமயம் யுத்திநிறுத்த மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் தெரிவித்துக்கொள்ளலாம் என்றும் ஏனைய நாட்களில் யாழ்ப்பாணம் கோவில வீதியில் உள்ள அலுவலகத்தில் முறைப்பாடு செய்யலாம் என்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ் பிரதிநிதி வலம்புரிக்குத் தெரிவித்தார். (ம)

## கூட்டுறவு அமைச்சர்...

நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அமைச்சரிடம் கையளிக்கும் (ம)

## இன்று கரும்புலி...

எந்நேரத்திலும் புலிகள் தம்மீது பாயலாம் என்ற அச்சத்தில் உறக்கமற்று படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடிக்கி நிற்பர்.

ஆனால் தற்போது புரிந்துணர்வு உடன்படிக்கையினால் கரும்புலிகள் தினத்திலும் படையினர் அச்சம் மறந்து தம்மை மறந்து பாடித்திரிவதைக் காணமுடிகிறது. (இ)

## விடுதலைப் புலி...

செய்யப்பட்டுள்ளனர்.

இக் கைது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

போராளிகள் விமல், இசைக்குயில், அழகன், சபேசன், வாஞ்சி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர். (ம)



ஒளிநிறுவன பரிசளிப்பு விழா அண்மையில் யா/வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் என்.கோகுலதாஸ் (யாழ் போருட் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்) பேசுவதையும், முன்னாள் ஒளிநிறுவன தலைவர் K.சி ரத்தினவடிவேல், சிறப்புவிருந்தினர் R.A. ராஜேந்திரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), R. ஸ்ரனிஸ்லாஸ் (தலைவர் ஒளி நிறுவனம்), சிறப்பு விருந்தினர் ஆ. சிவசுவாமி (வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்), சிறப்பு விருந்தினர் திருமதி த. புனிதவதி (கால்நடை வைத்திய அதகாரி) ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.)

**UNIVERSITY OF JAFFNA
SRI LANKA**

Further to our advertisement dated 18.06.2002 entertaining applications for Academic posts, candidates who are awaiting the results of the final examination may also apply for the post of Assistant Lecturer (on contract).

**REGISTRAR**
University of Jaffna
Thirunelvely.
2002.07.03 (C/4617)

**தாழமுத்த, உயரமுத்த மின் மார்க்க அமைப்பு வேலைகள் கூறுவிலை சமர்ப்பித்தல்.**

மேற்படிவேலைகளுக்கான கூறுவிலைகள் ஏற்கனவே இவ் வேலைகளை செய்வதற்காக இலங்கை மின்சார சபை வட மாகாண அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இக்கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்ப் படிவத்தை எனது அலுவலகத்தில் இன்று தொடக்கம் (2002. 07. 05) 2002. 07. 09 வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 2002. 07. 10 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அந்நேரமே திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு எனது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு)
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். [C/4616]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.